# திராவிடநாடு

## தூரமில்லை நம் நாடு!

[ என். பி. நடராசன் ]

அண்ணன் அழகிரி, தாளமுத்து, நம
தாய்நிகர் நடராசன், மஜீத்,—தமிழ்ப்
பண்ணமைபாண்டி, வேலாயுதமும்-பகை
பார்த்து நகைத்துயிர் நீத்தனரே! பல
கண்மணிகள் எழில் கல்லக்குடி—முத்து
காய்க்கும் கடலுள தூத்துக்குடி—வளர்
மண்ணிலே கொட்டினர் செங்குருதி! அதை
எண்ணியழுதுரங்கொண்டிடு நீ!

பட்டிகள், தொட்டிகள், பைந்தமிழின்—ஒலி
எட்டிடும் ஊர்களிலெங்கணுமே—இனி
கட்டிப்பறக்கட்டும் நம்கொடியே! அதன்
பட்டொளியில் பகைபட்டொழியும்!
வட்டிக்கடைத்தெருவானதடா! வளம்
கொட்டும் திருவிடம்! நீயறிவாய்!
தொட்டெடுப்பாய் கொள்கை வாளினையே—பயம்
விட்டொழி! கிட்டிடும் நம்நாடு!

2 அணா

## சூடான்

எகிப்து சர்க்கார் நல்லதொரு முடிவை வெளியிட்டிருக்கிறது— பக்கத்திலிருக்கும் சூடான் தனியரசாக விரும்புகிறதா; இல்லை, எகிப்துடன் சேர்ந்துவாழ விரும்புகிறதா என்பதை தேர்தல் நடத்தி தெரிந்துகொள்ளலாம் என்பதாக! சூடானில் நடைபெறவிருக்கும் இந்தத் தேர்தலைக் கண்காணித்து, நீதி வழங்குவதற்காக இந்தியா, பாகிஸ்தான், செக்கோஸ்லோவேகியா, யுகோஸ்லோவேகியா, ஸ்விடன், நார்வே, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளையும் அழைத்திருக்கிறது. எகிப்தின் பாதையிலேயே ஆதிக்க ஆசை பிடித்தலையும் நாடுகளும் நடந்துகொண்டால் எவ்வளவு நன்றாகயிருக்கும்!

## இந்தோசீனாவில்

விடுதலை வீரர் ஹோ-சி-மின் வசமுள்ள பகுதி போக மிஞ்சிய இந்தோசீனாவிலும் ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றிருக்கிறது, இந்தவாரம். தென்வியட்நாம் என்று குறிப்பிடப்படும் அந்தப் பகுதியில், தியெம் என்பவர் பிரதமர். எனினும், பாவோடாய் எனும் மன்னருக்குக் கட்டுப்பட்டதே அந்த அரசு என்று பிரெஞ்சு சர்க்கார் சொல்லிவந்தது! ''மணிமகுடமா! குடியரசா!!'' எனும் கேள்வியின் மீது தேர்தல் நடத்தி, பாவோடாய்க்குச் சீட்டுகொடுத்துவிட்டார்கள் இப்போது குடியரசு என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது! தியெம்அமெரிக்காவின்கைப் பொம்மையாகயிருப்பதால், இந்தக் குடியரசு எத்திசைக்கு இழுத்துச் செல்லப்படுமோ என்கிற பயம் இருந்தாலும், மணிமுடி ஒன்று கவிழ்ந்தது என மகிழலாம்!

## புது சீனாவில்

இந்தியாவில் கோவா எனுமிடத்தை வைத்துக் கொட்டமடிப்பதுபோல, சீனாவிலும் போர்த்துகீசியர்களுக்கு ஒரு இடம் இருக்கிறது. சுமார் இரண்டு லட்சம்பேர் வாழும் அந்த இடத்தின் பெயர் மகோ என்பதாகும். 400 ஆண்டுகளாகத் தங்கள் பிடியிலிருக்கிறது என்பதைக் கொண்டாடுவதற்காக, போர்த்துகீசிய சர்க்கார், ஒரு விழா கொண்டாட இருக்கிறார்கள். அப்படி ஏதாவது ஆர்ப்பாட்டம் செய்தால், நாங்கள் பொறுக்கமாட்டோம் என்று சீன சர்க்கார் அறிவித்திருப்பதோடு, விரைவில் மகோ, சீனாவுடன் சேர்க்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளது.

## பார்மோசா

செஞ்சீனா, இந்த எச்சரிக்கையை விட்டிருக்கிற அதே நேரத்தில், அந்தச் சீனாவுக்கு ஒரு எச்சரிக்கையை விடுக்கிறார், 'செத்த நிலை'யிலிருக்கும் சியாங்-கேய்-ஷேக், தேசீய சீனாவின் ஆண்டு விழாவொன்று பார்மோசாவில் நடைபெற்றபோது — ''இன்னும் கொஞ்சகாலத்தில் செஞ்சீனா நம்வசம் வந்தே சேரும்; ஆருயிர்த் தோழர்கள்-அஞ்சாதீர்கள்-எப்படியும் விரைவில் கைப்பற்றிவிடுவோம், செஞ்சீனாவை'' என்பதுதான், அவர் தரும் எச்சரிக்கை.

## இங்கிலாந்து

முதுகெலும்பு ஒடிந்த சியாங்கேய், பார்மோசாவில் இவ்வண்ணம் 'முணகும், இதே நேரத்தில், இலண்டன்மா நகரம் இன்னொரு அட்டகாசப் பிரியருக்கு, ஆனந்தமான வரவேற்பு அளித்துக்கொண்டிருக்கிறது. அவர்தான் போர்த்துகீசிய சர்க்காரின் தலைவர் க்ரெய்விராலோப்ஸ். அவருக்கு நடைபெற்ற வரவேற்புகளிலும், விருந்துகளிலும் இந்திய சர்க்காரின் தூதுவர் கலந்துகொள்ளவில்லையாம் - ஏனென்றால், அழைக்கப்படவில்லையாம்.

# திரட்டு

## இங்கே!

வரவேற்பும் வாழ்த்தும் அங்கே பெற்றுக் கொண்டிருக்கிறாரல்லவா, போர்த்துகீசிய ஜனாதிபதி, இலண்டனில்? அதே சமயத்தில், இதோ கோவாவிலுள்ள ராஜாராம் பாடீல் எனும் மராட்டியரும், 'கௌரவிக்கப்பட்டிருக்கிறார்' கோவாசர்க்காரால்! கடந்த ஜூனில்—6 மாதத்துக்கு முன்பு-கோவாவுக்குள் அறப்போர் துவங்க நுழைந்ததற்காக, பத்து ஆண்டுகள் சிறைவாசமும், ரூ. 2500 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறார். துண்டறிக்கை வினியோகம் செய்ததற்காக, ஒரு இந்திய வியாபாரிக்கு நான்கு ஆண்டு சிறைவாசம் அளிக்கப்பட்ட செய்தி, சென்றவாரம் வந்தது!

## டில்லியில்

அதனால் என்ன! எங்கள், பராமரிப்பும் படாடோபமும் குறைந்துவிடுமா, என்று கூறாமல் கூறுகிறது டில்லி செய்தி! நேரு பண்டிதர், இந்தோனேஷியாவிலிருந்து வந்திருக்கும் உதவித் தலைவர் ஹட்டாவுடன், சிங்காரமாகச் சென்று ராமலீலா வைபவத்தில் கலந்துகொண்டார் — ராவணனை, ராமன் கொல்வதைக் கண்டு களித்தார்— உற்சாக மிகுதியால் கூத்தாடிய கும்பலோடு அவரும் கலந்துகொண்டார். 'சுதந்திர சொரூபியே, வாழ்க! வென்' சொல்லும்படி தோன்றுகிறதல்லவா, உங்களுக்கு? அங்கே பத்து ஆண்டு! இங்கே, ராமலீலாவில் நேரு!

## அப்படிச் சொல்லலாமா

எப்போது பார்த்தாலும், இப்படியே குற்றம் சொல்லலாமா, நேரு சர்க்காரை! புதிதாக என்ன செய்யாமலிருக்கிறார்கள்? இதோ கேளுங்கள், ஒரு நற்செய்தியை! வெளிநாட்டு விருந்தினருக்கும், இந்தியத் தலைவர் போன்ற பெரிய பிரமுகர்களுக்கும் வீரர்கள் கூடி நின்று ராணுவ மரியாதை செய்வதுண்டல்லவா? அதில், ஒரு புரட்சி செய்யப்பட்டுவிட்டது. இது வரையில், மரியாதை ஏற்றுக்கொள்ளும் பிரமுகர் வரும்போது, நேராக நின்று தங்கள் மரியாதையைக் காட்டுவது, ராணுவ மரியாதை என்று கருதப்பட்டதாம். இது பழைய பிரிட்டிஷ் முறை என்பதால், அதை மாற்றிவிட்டு, இனிமேல் நேராகப் பார்க்காமல், வரும் விருந்தினர்பக்கம் தலையைச் சாய்த்து மரியாதை காட்ட வேண்டுமாம். இப்படித்தான் ரஷ்யாவில், நேருவுக்குச் செய்தார்களாம்.

## ஆடடா!

நேரு பண்டிதர் ரஷ்யாவுக்குச் சென்றதும் போதும்—இங்குள்ள ஏடுகளும், தலைவர்களும், வாய் பிளக்க வருணித்ததும் போதும். புல்கானின் வரவேற்கிறார்—மாலடோவ் கைகுலுக்குகிறார்-மக்கள் திரளைப் பாருங்கள்-மாலைகளை எப்படி எப்படி அள்ளி வீசுகிறார்கள்—ரஷ்யக் கொடியும் இந்தியக் கொடியும் சேர்ந்து பறக்கிறது—ஆகா ஊகூ! என்று பெருமைப்பட்டார்கள். 'பிராவ்டா' முதல் பக்கத்தில் நேருவின் படத்தைப் போட்டு, வாழ்க்கைச் சரிதமே எழுதிற்று என்று ஆனந்தப்பட்டார்கள். யாருக்குமே இப்படி இனி நடக்காது என்று எல்லோரும் கருத வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோளாயிருந்தது, ஆனால், இதோ — பர்மா பிரதமர், நூ, அங்கு போயிருக்கிறார், நேருவுக்கு அளித்ததுபோலவே, அவருக்கும் ராணுவ மரியாதை-பிராவ்டா முதல் பக்கத்தில் பெரிய படம்-புல்கானின் வரவேற்பு-மக்களின் மலர் மாலை - விசேஷ நடனம், என்று எல்லாம் நடக்கிறது. இப்போது, என்ன சொல்வார்களோ!

## ஆனால்.....

இப்படி பர்மியப் பிரதமர் நூ, அங்கு பாராட்டப்படுவதால், பர்மாவின் சிக்கல்கள் யாவும் தீர்ந்துவிட்டதோ எனக் கருதாதீர்கள்! கரீனியர் மிகவும் வெளிப்படையாகவே கிளர்ச்சி செய்வதும்—கிடைத்தவர்களைத் தூக்கிக் கொண்டுபோவதும்—சர்க்காரின் ஆட்சியை அலறச் செய்வதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்களாம்! ★

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 30-10-55 [இதழ் 17

# அவரது கிலி!

எத்திப் பிழைத்தோ, தத்தாவென்றுடியோ, பிடித்த இடத்தை விடக்கூடாதெனும் பெருமைக் குரியவர்கள், சர்வாதிகாரிகள் மட்டுமே என்று எண்ணியிருந்தோம். சர்க்காரைத் 'தொடும்' பாக்கியமனுபவிக்கும் தோழர் சி. சுப்ரமணியம் அவர்கள், அந்தப் பெருமையில் அடியேனும் பங்கு பெறுகிறேன் என்று அவசர அவசரமாக அறிவித்துக்கொள்ள விரும்புகிறார்! அண்மையில் ஓரிடத்தில் பேசினாராம், "தேர்தலில் குதிப்பதாகச் சொல்லி, தி. மு. கழகத்தினர் பாழுங் கிணற்றில் குதித்து விடப்போகிறார்கள்" என்பதாக.

"பார்! பார்! பாம்பு—பாம்பு. இந்தப் பக்கம் வராதே" என்று இருட்டிய நேரத்தில், வீட்டிற்குள் புகுந்து, கையில் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு ஓடும் 'தூயவன்' தொடர்ந்து பிடிக்க வருவோரைப் பார்த்து, கூறுகிறானென்றால், அதற்காக நின்று யோசிக்கமாட்டார்கள், எத்தனின் சுபாவம் உணர்ந்தோர். அமைச்சரை நாம், அப்படிப்பட்டவராக இதுகாறும் கருதியதில்லை—படித்தவர், பட்டம் பெற்றவர், சட்டஞானம் தெரியும் என்றே எண்ணி வருகிறோம்—எனினும், 'என் குணம் எது தெரியுமா?' என்று காட்டிக்கொள்ள முன்வருகிறார், பாபம், அனுபவிக்கட்டும், அந்த ஆனந்தத்தை.

தேர்தலில் கலந்துகொள்வதா இல்லையா—என்பதைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழகம், எந்த வித முடிவும் செய்யவில்லை. தீட்டுகிறார்கள் பலர், கடிதங்கள். கருத்துக்கள், பல மோதிக்கொண்டுள்ளன. ஆர்வமும், அரசியல் யூகமும் அறிந்த பலர் ஆலோசனைகள் கூறுகிறார்கள்—அத்தனையும், சீர் தூக்கிப் பார்த்து, எது சரியென முடிவு செய்யவேண்டிய பொறுப்பு, திருச்சியில் விரைவிலே கூட இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாட்டின் கையிலே இருக்கிறது. எனினும், அமைச்சருக்கு, அச்சமும் சோகமும் அலைமோதுகிறது, உள்ளத்தில். "ஐயோ, ஐயோ, பாழுங் கிணறு......" என்று பயமுறுத்துகிறார்.

பாழுங்கிணறானாலும் அதைத் தாண்டிவரும் தைரியம் மிக்கோர் தான், நமது கூடாரத்தில் இருப்போர்! பாழுங்கிணற்றில் குதித்தால்தான் நாடு பலனடைய முடியும் என்றால், நிச்சயம் குதிக்கத்தான் குதிப்பார்கள்-குதித்தால் என்ன ஆகுமோ, என்பது அமைச்சரானோருக்கு உண்டாகக் கூடிய கவலை! நாம், 'கனம்' ஆக விரும்புபவர்களல்ல—தொண்டர்கள், அழுக்குடை கட்டுவதைப் பற்றிச் சிறிதும் கூச்சம்கொள்ளாத குணமுடையோர். அறிய வேண்டும், அவர்! ஆனால், அவர் கூறுவதுபோல, தேர்தல் என்பது பாழுங்கிணறுமல்ல! பழிவாங்கும் குகையுமல்ல!

அக்கிரமத்தைக் கண்டிக்கவும், கொடுங்கோன்மையைத் தகர்க்கவும், நீதி நிலைக்கவும் பாடுபடுவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டவன், அஞ்சான் எதற்கும். பஞ்சையானாலும் பாதி உடை உடுப்பவன் ஆனாலும், கூழ் குடித்தே உலவவேண்டியவனென்றாலும் – கொடுமையைச் சாய்க்கக் கொஞ்சமும் தயங்கான். அப்படிப் பட்ட கொள்கை வீரர்தம் கூடாரம், தி. மு. கழகம்.

காங்கிரஸ் பெற்றுள்ள வசதிகள் கண்ணுக்குமுன் காட்சி அளிக்காமலில்லை. ஆனாலும், அவர்கள் இழந்து வருவது ஒன்றுண்டு. மாளிகைகளை மண்குடிசைகளாக்கவும், மலைகளைச் சிறு கற்களாகப் பிளக்கவும், காட்டையும் மேட்டையும் கழனியாக்கவும், நினைத்ததைச் செயலாக்கவும்கூடிய மக்கள் மன்றம்—அதை, அவர்கள், வெகு வேகமாக இழந்து வருகிறார்கள். இல்லையென்றால், "ஏனோதானோக்கள், என்ன தெரியும் இதுகளுக்கு! பேசத் தெரியும்—எழுதத் தெரியும்" என்று இதுகாறும் பேசிவந்த அமைச்சர், நமக்கு அறிவுரையும் ஆலோசனையும் வழங்கப் புறப்பட மாட்டார். கூண்டோடு பிடித்துச் சிறையில் பூட்டி—கொள்கைக்காகச் சென்றோரைப் பிணமாக்கித் தந்து பெருமை தேடிக்கொண்ட பெரியவரின் வலதுகரமாயிற்றே—அவருக்கு எவ்வளவு ஆசை இருக்கும், நமது இயக்கம் உயிரோடு வாழவேண்டுமென்பதில்! தெரியுமே நமக்கு.

அவர் அறிகிறார் — வெளியூருக்குப் போகும்போதெல்லாம் விளக்கமாகவே தெரிந்துகொள்கிறார் — மக்கள் மன்றம் எப்பக்கம் இருக்கிறது எனும் உண்மையை. அப்படி அறியும்போது, அச்சம் தாக்குகிறது உள்ளத்தை — துக்கம் அடைக்கிறது தொண்டையை— உடனே, உபதேசியாகி, உருக ஆரம்பிக்கிறார், 'ஐயோ, பாம்பு— பாம்பு,' என்றானே அவனைப்போல.

அவசரக்காரராம், அவர், சொல்வார்கள்! ஆகவே உள்ளத்திலிருப்பதை உடனே கொட்டிவிட்டார். ஆனால் அவரைப்போன்ற பலர், குமுறிக்கொண்டும், உள்ளத்தில் கள்ள நினைவுகளை எழுப்பிக்கொண்டும், இருப்பதை அறிவோம் நாம். அவர்கள், நமது, கவனத்துக்கே உரியவர்களல்ல என்பதைநமதரும் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். அப்படிப்பட்டோரெல்லாம் நம்மைப்பற்றி நினைக்க— அஞ்ச—யோசனை கூறத்தக்க அளவுக்கு, நாம் வளர்ந்திருக்கிறோம். அந்த வளர்ச்சியே, நமக்குப் பெருந்துணை. அதனைச் செம்மையாக்கி, செயல் வடிவில் கொணர, ஒவ்வொருவரும் முயல்வோம்—அமைச்சருக்குத் தேர்தல் கிணற்றைத் தாண்டிவிட்டால் போதும்; ஆனால் நமக்கோ, தாண்ட வேண்டிய கிணறுகள், ஏராளம் உண்டு. அவையனைத்தையும் தாண்டி வெற்றிபெறுவோம் எனும் நம்பிக்கையும் உண்டு.

இல்லையென்றால், அறுபதாண்டுக் கட்சியான காங்கிரசுக்கு எதிராக, ஆறாண்டுகளில் இவ்வளவு பெரிய இயக்கமாக வளரமுடியுமா நம்மால்! எலியென்றவர்களன்றோ இவர்கள்? இன்று கிலி கொண்டு பேசுகின்றனர். அதன் பொருள் என்ன—புரியாதவர்களல்லவே நீங்கள்? சிரியுங்கள், இதுபோன்ற சிலர்களின் உரை கேட்டு. செயலாற்றுங்கள், நமது மாநில மாநாட்டுக்கு மக்களைத் திரட்டி வர. அங்கே, மக்கள் மன்றம், நமக்கு என்ன கட்டளையிடுகிறதோ, அதன்படி நடப்போம். அதற்கான முயற்சிகளைச் செய்வீர்! மாநில மாநாடு, சிறப்புற நடைபெற, சீக்கிரம் ஆவன செய்வீர்!!

★

# ★ மது விலக்கு ★

திறமையாக நடக்கிறதாம்!—டில்லி சர்க்காரால் மதுவிலக்குபற்றி ஆராயப்பட்ட கமிட்டி, தெரிவிக்கிறது. பூரண மது விலக்கு அமுல் செய்யப்படும் இடங்களான, பம்பாயிலும் சென்னையிலும், மது விலக்கு திறமையாக நடைபெறுகிறதாம்!

ஆச்சாரியார், தாகூர் கழக டைரக்டர் லட்சுமணன், திருநெல்வேலி வேலு நாராயணன், ஓய்வுபெற்ற சர்ஜன் ஜனரல் டாக்டர் அருணாசலம், சௌந்திரம் ராமச்சந்திரன், இவர்களில், யார் இந்த உண்மையைக் கமிட்டிக்குச் சொன்னார்களோ, தெரியவில்லை. மது விலக்கு அமுல் செய்வதைப்பற்றி, சென்னை மாநிலத்தில், கமிட்டியினர் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள், இவர்களை. எண்மர் அடங்கிய இக்கமிட்டியில், இராமச்சந்திரன் எனும் சென்னை 'சேவா' வீரரும் இருந்திருக்கிறார் — எனினும், கமிட்டி தெரிவிக்கிறது, பூரண மது விலக்கு இங்கு நன்றாக அமுல் நடத்தப்படுவதாக.

சர்க்காரின் சகல வசதிகளையும் பெற்ற கமிட்டியாயிற்றே, அதனால் புள்ளி விபரங்களைக் கொடுத்தபடியே கூறுகிறது, திறமையாக நடப்பதாக! கள்ளச் சாராயம் போன்றவைகளைக் காய்ச்சியதால் தண்டனை அடைந்தோரும், சட்டத்தை மீறிக் குடித்ததால் தண்டிக்கப்பட்டோரும் 1949-50-ல் பம்பாயில் 11000 பேர் இருந்தார்கள். 1953-54-ல் 27000 பேராக ஆகியிருக்கிறார்கள். சென்னையில் 1949-50ல் 30000 குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள்; 1953-54ல் அவர்கள் 42000 ஆக ஆகியிருக்கிறார்கள். எனினும், கமிட்டி கூறுகிறது, மதுவிலக்கு திறமையாக நடைபெற்று வருகிறதென்று!!

நீதிமன்றங்கள் ஆரம்பமாகும்போது கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கும் சுண்டிச் சோறு காய்ச்சியவர்களின் கூட்டம், சுழட்டி குடித்தவர் தொகை கலக்கி தயாரித்த பெண்மணிகள், வார்னிஷ் தயாரித்து விற்றவர்கள்—முதலியோரைக் கண்டால், நமக்குக் கண்ணீர் வரும். பஞ்சைத் தலை, வற்றிய உடல்-வறுமையின் சின்னங்களாக இருப்பார்கள். இப்படி நிறையும் கூட்டத்தின் தொகையோ, குவிகிறது, அதிகமாக. சிறைகள் முழுதும் குடித்தோர் கூட்டமாகிவிட்டது என்று குறைபடுகிறார்கள், அதிகாரிகள். ஆனால், அறிவுரை வழங்க நியமிக்கப்பட்ட கமிட்டியோ-திறமையாக நடப்பதாகத் தெரிவிக்கிறது.

மதுவிலக்கு திறமையாக நடைபெற வேண்டும், குடித்துவிட்டுக் கூத்தாடுவோர் தொகை குறையவேண்டும், குடிகளைக் கெடுக்கும் குடி ஒழிய வேண்டும், என்பதில் எல்லோரையும் விட நாமும் அக்கரையும் ஆசையும் கொண்டவர்கள் தாம்.

ஆனால் ஆசைக்காகவும் அக்கரைக்காகவும், உண்மையினைப் பூசி மெழுகுவது, ஏற்ற பணிக்கும் இலாயக்கல்ல! விரும்பும் ஆசையும் நிறைவேறாது!

டில்லி பீடத்தால், மதுவிலக்கை எப்படி பூர்ணமாக நாடு முழுவதும் அமுல் செய்யலாம் என்பது குறித்து நிறுவப்பட்ட இந்தக் கமிட்டி, ஆசைக்கு மெருகுதேட முற்பட்டிருக்கிறது.

சாதாரணமாகவே, எந்தப் பிரச்னையானாலும், இப்படி ஒரு கமிட்டிகளைப் போடுவதும்—அந்தக் கமிட்டிகளில் தமக்கு வேண்டியவர்களை நியமிப்பதும் — முன்பே முடிவு செய்யப்பட்ட ஒரு விஷயத்துக்குமேல் பூச்சுப் பூசிகொண்டு வந்து நிறுத்துவதும், வெள்ளைக்காரர்தம் காலத்திய முறை. அதே முறையை. அப்படியே 'காப்பி'யடிக்கிறது, காங்கிரஸ் பீடம். அதனாலேயே உருவான யோசனைகள் மலர்வதற்குப் பதில், உடுக்கைச் சப்தமே கேட்கிறது.

ஆந்திரா, பம்பாய், சென்னை, சௌராஷ்டிரம் ஆகிய நான்கு மாகாணங்களில்மட்டுமே பூர்ண மதுவிலக்கு உள்ளது; அஸ்ஸாம், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மத்ய பாரதம், மைசூர், திருவாங்கூர் கொச்சி, இமாசலப் பிரதேசம் ஆகிய ஒன்பது மாகாணங்களில் சிற்சில இடங்களில் மதுவிலக்கும் சிற்சில இடங்களில் குடிக்க அனுமதியுமாக 'பாதிகிணறு' தாண்டும் வகையில் உள்ளது; குடகு ஆஜ்மீர் என்னும் இரு பிரதேசங்களிலும், 'பெர்மிட்' மூலம் யாவும் அளிக்கப்பட்டு வருகிறது; பீகார், மேற்குவங்கம், ஐதராபாத், பெப்சு, ராஜஸ்தான், விந்தியப் பிரதேசம், போபால், டெல்லி, கச்சு, மணிபூர், திரிபுரா எனும் பதினொரு இடங்களில், மதுவிலக்கே கிடையாது.

நிலைமை இப்படியிருப்பது மாறி, எல்லா இடங்களிலும் பூர்ண மது விலக்கு அமுல் செய்யப்பட, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், குற்றங்கள் குறைய எப்படி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்—என்கிற விஷயங்களைப் பரிசீலனை செய்து ஆலோசனை கூறவே, இந்தக் குழுவினர், அமைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களோ, பழைய உடுக்கையையே தட்டுகிறார்கள். "மது விலக்கு, எவ்வளவு அவசியம் தெரியுமா? அப்படிச் செய்த மாகாணங்களில், எப்படி அமுல் நடக்கிறது தெரியுமா?" என்று ஏனையோருக்கு பிரசங்கம் செய்வதாகவே தோன்றுகிறது, 'கத்தைகத்தையாக' அவர்கள் அனுப்பியிருக்கும் அறிக்கை!!

இல்லையென்றால் சொல்வார்களா, 'கள்ளச்சாராயம் காய்ச்சுவதா? ஏ, அப்பா, இன்று நாட்டிலே நடைபெறுகிற முக்கியமான குடிசைத் தொழில், அதுதான்—என்று சில இடங்களில் தெரிவித்தார்கள். இது, வேண்டுமென்றே மிகைப்படுத்திக் கூறப்படும் விஷயம் என்றே நாங்கள் கருதுகிறோம்" மிகைப்படுத்திக் கூறப்படும் விஷயமா இது!!

மதுவிலக்கு தேவையில்லை, என்று வெளிப்படையாக வாதாடுவோர் யாரும் கிடையாது.

இந்தக் கமிட்டியிடமிருந்து மக்கள் எதிர்பார்த்ததே, தீவிரமாக மது விலக்கைச் செய்யும்படி என்ன யோசனைகள் தெரிவிப்பார்கள், என்பதுதான்! ஆனால் கமிட்டியோ, அதிகமாக அந்தாதி பாடிவிட்டு, உருப்படியான யோசனைகள் ஒன்றிரண்டை மட்டும் தந்துள்ளது.

அந்த ஒன்றிரண்டு யோசனைகளில், குறிப்பிடக் கூடியது, திருட்டுத்தனமாக குடிப் பொருள்கள் காய்ச்சுவோர் குறித்து—இது, வேலையில்லாத் திண்டாட்டத்தாலேயே உண்டாகிறது! ஆகவே, அந்தக் குறையைப் போக்க முழுமூச்சாக முயலவேண்டும், என்று தெரிவித்துள்ளது. மலைபோன்ற இந்தப் பிரச்னைக்கு, என்ன பரிகாரம் செய்யப் போகிறார்களோ, காங்கிரசாட்சியினர். உண்மையில், வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகம் இருப்பதால்தான் இதுபோன்ற தீய வழிகளில் ஏராளமானோர் ஈடுபடுகிறார்கள்—அதைப் போக்க என்ன வழி? பிடிப்பதும், அடிப்பதும், சிறையில் போடுவதுமாக இருப்பதால் என்ன பயன்? மீண்டும் மீண்டும், அதே குற்றங்களைச் செய்துவிட்டு, அவர்கள் சிறைக்கு வருவதாகவே அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆதலால், பூரண மதுவிலக்கு, வெற்றிபெற வேண்டுமாயின்—சட்டத்தால் தட்டுவதும், போலீஸ்படை வேட்டையாடுதலும் பயனளிக்காது. வறுமையும், வேலையில்லாக் கொடுமையும் ஒழிக்கப்படவேண்டும்—அன்றுமுதல் இன்றுவரை, நாம் இதனையே சொல்லிவருகிறோம். திருட்டுத்தனமாக சாராயம்

(13-ம் பக்கம் பார்க்க)

# 'ஈனஜென்மம்!'

அரங்கண்ணல்

**1**

அந்தத் தோட்டம்தான் துளசிக்குச் சொத்து. கத்திரி, வெண்டை, மிளகாய், இஞ்சி, என்று பயிரிட்டு அதைக்கொண்டு தன்னுடைய வாழ்க்கையை நகர்த்தி வந்தாள். தனி மரம்! வயது நாற்பதுக்குமேலிருக்கும். வாழ்க்கையின் அந்திநேரக் கிரணங்கள் அவள் முகத்திலும் உடம்பிலும் தன்னுடைய கிறல்களைப் பதித்துக்கொண்டிருந்தன. கிழவியாகிக்கொண்டிருந்த அந்த ஏழையின் கதையில் விசித்திரங்களும், வியப்புக்குரிய நிகழ்ச்சிகளும், கிடையாது. சராசரி நிங்களும், நானும் ஆதரிப்பாரில்லா விடில் என்னென்ன கஷ்டங்களை அடைவோமோ அவைகளைத்தான் அவளும் அடைந்தாள். பருவக் குமரியானதும், ஒருவனுக்கு மனைவியானாள். ஏழையான அவளுக்கு, கட்டிக் கரும்பே! கனியே! தேனே! என்று பாடக் கூடியவனா பர்த்தாவாகக் கிடைப்பான்? ஒரு ஏழை கிடைத்தான்! வருமானத்தில் பாதியை கள்ளுக்கும் சாராயத்துக்கும் அழுதுவிட்டு, வீட்டுக்கு வருவான். அடியே கழுதே! என்னடி அப்படிப்பார்க்கிறே நாயே! இந்நேரம் எவனோடடி பேசப்போயிருந்தே பேயே! ஒன்னை வெட்டி விசறேனா. இல்லியா, பாரடி!—இதுதான், அவனிடமிருந்து, அவள் பெற்ற காதற் பேச்சுகள். இருந்தாலும், அவன் அவளுக்குப் புருடனாயிற்றே! ஏழைக் குடும்பங்களில் இவைதானே! சகஜம் அதனால், கொஞ்சமும் அழாது, வருந்தாது அவனோடு வாழ்ந்துகொண்டிருந்தாள். அவர்களது 'இன்பவாழ்க்கையின்' சின்னங்கள் என்று, அவள் முதுகில் ஏற்பட்ட வடு—ஒருமுறை கீழே தள்ளிவிட்டதால் நெற்றியில் ஏற்பட்ட காயம் — இவைகளைத்தான் கூறலாம்—குழந்தை குட்டிகள் எதுவும் கிடையாது! ஒரு நாள், அதிகக் குடிக்கு ஆளாகி, ரோட்டை அளவெடுத்துக் கொண்டுவந்து கொண்டிருந்தான் அவன். வேதாந்த சிரோன்மணி அப்பளாச்சாரியார் அவசரமாகப் பறந்து கொண்டிருந்தார்—அன்று அமைச்சரின் தலைமையிலே அவருடைய பிரசங்கம்—அன்பும் ஞயனும் எனும் பொருள்பற்றி. அதனால், அவருடைய கார், வாயுவேகமாக வந்துகொண்டிருந்தது! மோதிற்று, அவனை! செத்தான்.

போலீஸ் — வழக்கு — எல்லாம் பிறகு நடந்தது. அவனொருவன் செத்தான் என்பதால், அப்பளாச்சாரியார் கோயிலுக்குப் போகாமலுமில்லை—அமைச்சர் ஆராதனையைக் கண்டு மகிழ்வதாகப் பத்திரிகைகளில் படம் வராமலுமில்லை. போலீசார் போட்ட வழக்கு என்ன செய்யமுடியும் அப்பளாச்சாரியாரை? ஏதோ, டிரைவருக்கு அபராதம் போட்டு இறந்த உயிருக்கு 'நீதி' வழங்கப்பட்டுவிட்டது! செத்தவனோ, ஏழை — அதோடு, குடிகாரன்.

"பாபம்—கர்மம்—கண்ருவி—இதுகளையெல்லாம் ஹிட்லர் செஞ்சது போல வரிசையா நிறுத்திவைச்சு சுட்டுத் தள்ளிடணும்" என்று அப்பளாச்சாரி சீற, "அடி மூதேவி! வருசம் ஆருகலே! அதுக்குள்ளே புருசனை முழுங்கிட்டியேடி!" என்று அக்கம் பக்கத்திலிருப்போர், 'அனுதாபம்' தெரிவிக்க, அவளுடைய வாழ்க்கையில் ஒரு அத்தியாயம் முடிந்தது.

அடுத்த அத்தியாயத்தை ஆரம்பித்துவைக்க, அவள் வசித்த குப்பத்தில், ஏராளமானோர் தயாராயிருந்தனர்! அந்தக் குப்பத்தைச் சுற்றி, ஊரின் சாக்கடை ஓடிக்கொண்டிருந்தது — அதிலிருந்து ஏராளமான கொசுக்களும் ஈக்களும் தினசரி படையெடுத்தவண்ணமிருக்கும் அவள் குடிசையை! இப்போது அவளது குடிசைக்கு அவைகள் மட்டுமல்ல, அடியாள் அம்பலம்—கத்திவீச்சு கணபதி—குத்துச்சண்டை குமாரசாமி—கோணை கோவிந்தன்—இவர்களும், படையெடுக்கலாயினர்! தனிமலர்—வண்டுகள்கூட அல்ல, வட்டமிடுவது—தேளும் பாம்பும்! என்ன செய்ய முடியும்? சினிமாவில் வரும் கதாநாயகி என்ருல், சோககீதம் பாடலாம் — சோரம் செய்ய வரும் 'வில்லனை'ப் பார்த்து கனல்கக்கும் வசனங்களைப் பொழியலாம். வாழ்க்கைக்கும் கற்பனைக்கும்தான் பூமிக்கும் ஆகாயத்துக்குமுள்ள ஒற்றுமையாயிற்றே! அவளுக்கு யோசிக்கவோ — என்ன செய்யலாமென்று சிந்திக்கவோகூட, நேரம் கிடையாது. வளைந்துகொடுத்தாள்! வயிற்றுப்பசிக்கு மட்டுமின்றி உள்ளத்துப் பசியும் ஓரளவு அடங்கலாயிற்று, புதுவழி மூலம். கேட்டறியாத காதல் மொழிகளையெல்லாம் கேட்கலானுள். ஊர், கேலி பேசிற்று! எதற்குத்தான் பேசாமலிருக்கிறது, ஊர்? முதலில், அவளுக்கு வெட்கமும், துக்கமும், நெஞ்சையடைத்தது—பிறகு, படிப்படியாக அவள் மனம் மரத்துப் போகலாயிற்று. அதனால், அப்படி யாராவது கேலி செய்தால்கூட, அவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள்.

"மானம், வெட்கம் இருக்கிறதா, பார்! ஈனஜென்மம்..." என்றனர்.

"புனிதஜென்மம் எடுத்த என்னையா அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று, சண்டைக்குப் போகவில்லை, அவள்.

"ஆமாம்! சாமி, ஈனஜென்மம்தான் நான். என்னை அப்படிப் படைத்துவிட்டான் ஈஸ்வரன். நான் என்ன செய்வது?" என்று சிரித்துக்கொண்டே பதில் கூறுவாள். சீச்சீ! — என்றனர். பகலில்தான்! இரவில், அப்படியெல்லாம் சொன்னவர்களில் எத்தனையோ பேர், விலாசம் விசாரித்துக்கொண்டு—உன்விழி, மீன்!

## நவ யுகம்

அமெரிக்காவில், ஒரு சீமான், 300 மைல்களுக்கப்பாலுள்ள ஒரு நகருக்குச் சென்ற தன்னுடைய மனைவியை விமானத்திலேற்றிவிட்டு, வீட்டுக்குத் திரும்பினார். விமானகூடத்திலிருந்து அவர் வீடு மூன்று மைலிருக்குமாம். போக்குவரத்து அதிகம் இருந்த காரணத்தால், அவருடைய காருக்குச் சிறிது தாமதம் ஏற்பட்டது. வீட்டிற்குச் சென்று அறைக்குள் நுழைந்ததும், தந்தியொன்று காத்திருந்ததாம் — "நான் சுகமே ஊருக்கு வந்து சேர்ந்தேன்—உங்கள் மனைவி!" என்று.

அங்கம், ஒரு சுரங்கம்! ஆகா, நீ சம்மதியாவிடில் என் உயிர் தரியாது! — என்று தண்டனிட்டனர், அவளிடம்.

இரண்டு உலகம்—அங்கே இரு வேடம் தாங்கி உலவும் மனிதர்கள் —அவர்களது ஆஷாடபூதித்தனம் —இவையெல்லாவற்றையும், வெகு சீக்கிரத்தில் தெரிந்துகொண்டாள், அவள். அதனால், சமூகமெனும் வாள் வீசிய வெட்டுக்காயங்களை வெகு சுலபமாகத் தாங்கிக்கொண்டாள்.

பெரிய மனிதர்கள் கூடும் போதெல்லாம், ஊரின் மானமே கடுகிறது—வெளியூரில் எல்லாம் கேவலமாகப் பேசுகிறார்கள்—அப்படி இப்படியென்று பேசுவார்கள். அந்தப் பெரிய மனிதர்களில் பலருடைய யோக்யதை என்னவென்பது, துளசிக்குத் தெரியும்! ஒருமுறை இரண்டு பெரிய மனிதர்களுக்கிடையே, அவள் விஷயமாக மோதுதல் ஏற்பட்டது—ஆனால் இருவரும், உண்மையை மறைத்துவிட்டு, ஊருக்கு நடுநாயகம்போல விளங்கிய வேதாந்த சிரோன்மணி அப்பளாச்சாரியிடம்போய் முறையிட்டனர்.

“அடடா! அடியேன் இருக்கும் ஊரில் இப்படியொரு குடிகேடியா! இழுத்துவாருங்கள்—யார் அங்கே? இந்த லெட்டரைக்கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்துவிட்டு வாருங்கள்—என்றார். விளைவாக, ஊரின் மானத்தைக் கெடுக்கும் அவள், போலீசாரிடம் அனுப்பப்பட்டு, அங்கிருந்து குற்றவாளிக் கூண்டிலே கொண்டுபோய் நிறுத்தப்பட்டு, பதினைந்து நாள் சிறைவாசத்தையும்கூடப் பார்த்து வந்திருக்கிறாள். எப்படியோ, பத்து ஆண்டுகள் பறந்துபோய், கிழவிக் கோலத்துக்குள் அடியெடுத்து வைத்துக்கொண்டிருந்தாள்! மிக மிகப் படித்தவனுக்குக்கூட, தெரியாததெல்லாம் தெரியும் அவளுக்கு இந்த உலகைப்பற்றி.

அவளுக்குத் தெரியவேண்டிய விஷயங்களை, அனுபவம் எனும் ஆசான் மிக அருமையாகக் கற்றுக்கொடுத்திருந்தான். அதனால், வயது ஏற ஏற, தன்னுடைய ஜீவனத்துக்கென்று ஒரு நிரந்தர தொழிலைத் தேடவேண்டியவளானாள்—வாலிபமும், வசீகரமும் வானவில்போன்றவை என்பதைத் தெரிந்துகொண்டிருந்தால் சம்பாத்தியம் வந்த சமயத்தில் கொஞ்சம் மீத்து தேடிக்கொண்ட பொருள்கள்தான் அந்தக் குடிசையும் தோட்டமும். கெட்டுப்போனவள் வீட்டு கத்தரிக்காயென்பதால், அது ருசியற்றிருக்கவில்லை! விபசாரம் செய்தவள் விற்கிறாளே என்பதால் வீதியிலிருப்போரும் வாங்காமலில்லை! வேதாந்த சிரோன்மணி அப்பளாச்சாரியாருக்குக்கூட, துளசி வீட்டு அவரையும் வெண்டையும்தான், ரொம்பப் பிடித்திருந்தது. என்றாவது ஒருநாள், ‘இல்லே சாமி! இன்றைக்கு எல்லாம் விற்றுவிட்டது!’ என்று அவள் சொன்னால், அவருக்கு மிகவும் சங்கடமாயிருக்கும், அன்றைய சாப்பாட்டில் உட்கார. “என்னமோடியம்மா! பழைய காலத்தை மறந்துட்டே— ஊம்!—ஆயிரம் இருந்தாலும் இந்த ஐயனுடைய மனசைக் குளிரச் செய்ய கொடுத்துவைக்கணும். உன் பாபங்களுக்கு, இதைவிட வேறு வழி இல்லே போக்கிக்கொள்ள. உன்னிடம் அதிகம் பேசவும் ஆபத்தா இருக்கு; சுடச்சுட ஏதாவது சொல்லிடுவே...” என்று பட்டதும் படாததுமாக, சொல்வதுண்டு.

துளசி என்ன மரக்கட்டையா? பழைய கதை ஒன்றையும் மறந்துவிடவில்லை—நீ படுத்திய பாடு என் மனசை இன்னும் ரம்பம் போட்டு அறுக்குது—அன்னைக்கு ஒரு வீடுதான் இருந்தது — இன்னைக்கு ஏழெட்டு மாடி வீடு—அம்மா உடம்பெல்லாம் தகதகன்னு வைரம் — இப்படி ஊரை ஏய்த்துக் கொட்டி வைச்சிருக்கே. நானோ, இந்த வயிறை வளர்க்க—உடம்பை விற்றேன்—மானத்தை விற்றேன்— மரக்கட்டையாகவும் ஆனேன். ஊம் இப்ப பசப்புறே—என்று மனத்துக்குள் நினைத்தவளாய், “போ சாமி! வாய் கருணைக் கிழங்கு, கை காஞ்சு போன திடலு—காசைக் கொஞ்சம் கூட எறிஞ்சா, கதறிட்டு வர்ரேன் தினசரி” என்று சொல்லியபடியே போய்க்கொண்டிருப்பாள்.

**2**

அன்றைய தினமும், காலையில் எழுந்து, கத்தரி-வெண்டை-கொத்தவரை - புடலை - கோசு-தக்காளி, இத்யாதிகளையெல்லாம் பறித்துக் கொண்டு கிளம்பினாள், ஊர்வலம் புறப்பட—கொஞ்சதூரம் போயிருப்பாள், கத்தரித் தெரு அஞ்சலை கண்டாள், அவளை. அஞ்சலைபோன்ற ஏழைகளுக்கு, ‘தட்டுமுட்டு’ ஏற்படும்போதெல்லாம், துளசிதான் பாங்கு மாதிரி. அதனால், இவள் வசம், ஊர் கதைகளெல்லாம் அடிபடும்! அதிலும், அஞ்சலை, அப்பளாச்சாரி வீட்டுக்கு ‘பத்து’ தேய்ப்பவள். துளசியைக் கண்டதும் அஞ்சலை ஆரம்பித்தாள்.

“அக்கா இந்த அக்கிரமத்தைக் கேட்டியா?”

“என்ன அஞ்சலை! என்ன அக்கிரமம்?”

“இந்த அப்பளாச்சாரி வீட்டிலேதான் அக்கா—வேறே இடம்னா இன்னேரம் ஊர் சிரிச்சிருக்கும்—காதும் காதும் வைச்சாப்போலே, ‘கப் சிப்’னு இருக்காங்க — கண்றாவி, கண்றாவி!”

“விபரமாச் சொல்லு அஞ்சலை—அப்பளாச்சாரி வீட்டிலே என்னா?”

“அவர் பொண்ணு ஒண்ணு இல்லே, மூத்தது...”

“ஆமாம், பட்டணத்திலே படிச்சிகிட்டு இருந்துதுன்னு சொல்வாரு ......”

“நல்லா படிச்சு வாழ்ந்துது போ; என் பெண்ணா இருந்துச்சுன்னு

---

**பௌர்ணமிக்குப் பிறகு சந்திரன் தேய வேண்டியதுதான்.**

**அமாவாசைக்குப் பிறகு, நிச்சயம் வளரத்தான் வேண்டும்.**

—சீன பழமொழி.

சீனத்திலுள்ள ஒரு புத்தவிகாரத்தில் இந்தப் பழமொழியைக் கேள்விப்பட்டேன். என் வாழ்க்கையில் பூர்ண மகிழ்ச்சியில் நான் நீந்தியபோதும் சரி; தொல்லைகளுக்கு மத்தியில் துடித்தாலும் சரி, ஒருபோதும் அந்தப் பழமொழியினை நான் மறந்ததில்லை. இரவு எப்போதும் இருக்காது! அதுபோலத்தான், துன்பங்களும் எப்போதும் ஒரு மனிதனைத் தொத்திக்கொண்டிருக்க முடியாது. பகலுக்குப்பின், இரவு வந்தே ஆகவேண்டும்! அதைப்போல, பணமோ, செல்வாக்கோ எதானாலும் அதிக உச்சிக்குப் போன பிறகு, இறக்கத்தை எப்போதும் எதிர்பார்க்கத்தான் வேண்டும்.

இந்த அறிவுரை, தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமல்ல; அரசுகள், நாடுகள், ஆட்சிபீடமேறிகள், அரசியல் தலைவர்கள் —எல்லோருக்கும் பொருந்தும்——ஏன், உங்களுக்குத் தெரியாதா! விரிந்துகிடக்கும் சரிதத்தில்தான் ஏராள எடுத்துக்காட்டுகள் உண்டே! இந்த உண்மையை எந்த சர்வாதிகாரியும் மறக்கக் கூடாது —ஆதிக்கம் செலுத்தும் அரசும் மறந்துவிடக் கூடாது.

விக்கிரம்

[ஆங்கில நூலாசிரியர்]

இந்நேரம் அரிவாள்மணையாலேயே, அடிச்சிப் புதைச்சிருப்பேன்"

"அப்படி அந்தப் பொண்ணு என்ன செஞ்சுது அஞ்சலை?"

"என்ன செஞ்சுது—படிக்கிறேன் படிக்கிறேன்னு, வயிற்றிலே ஏற்றிக்கிட்டு வந்து நிக்குது..."

"என்னது?"

"ஆமாங்கான்ன"

அஞ்சலை போய்விட்டாள்—அப்பளாச்சாரிக்குஎன்னகேடு? பம்பாயிலேருந்து காசி வரைக்கும், தெற்கே திரும்பினால் கன்னியா குமரிவரைக்கும்அவர்போய் வேதாந்தம்படித்து, கொண்டு வரும் பணத்துக்குக் கணக்கு வழக்கே இல்லே — வீடு, ஏழெட்டு, பெரிது பெரிதா — அவரோட பொண்ணு ஏன் இப்படியெல்லாம் கெடணும்? சோற்றுக்கில்லாமதான், நான் கெட்டேன், அதுக்கு எவ்வளவு குதியா குதிச்சாரு, இந்த ஐயர்? இப்ப, அவர் பெண்ணு கெட்டுப்போய் வந்திருக்காமே! அதிலும் கன்னி கழியாத பொண்ணு! ஊம்............அதைச் சகிச்சுகிட்டு, எப்படி இருப்பார், அவரு? எதுக்கும் போய் பார்ப்போம் என்று எண்ணினாள். முகத்தை மூடிக்கொண்டு அய்யங்கார் உள்ளேயேகிடப்பார் — வீடு முழுதுமே ஒரே விசாரமேயிருக்கும்-என்று நினைத்துக்கொண்டுபோன அவள், திடுக்கிட வேண்டியதாயிருந்தது! அய்யங்கார், வழக்கத்தைவிட, கொஞ்சம் உரத்த குரலிலேதான் பேசினார்—உள்ளேயிருந்துவந்த அம்மாவுடைய முகத்திலேகூட ஒரு சொட்டு திகிலைக் காணும்-என்ன இது! உண்மையா, பொய்யா! என்று யோசிக்க வேண்டியவளானாள். எதற்கும் கேட்டு வைப்போமே என்று,

"ஏன்சாமி! கொழந்தை வந்திருக்காமே......" என்றாள்.

"கோந்தையா! கோமளி, இவ சொல்றதைக் கேட்டுண்டியா? சந்திரிகா வந்து கோந்தையாமே! அடி, அசடே — அவ, இப்ப எவ்வளவு பெரிய பொண்ணுயிருக்கா தெரியுமோ —காலேஜ்லேயிருந்து இந்தியா பூராவையும் சுற்றிப் பார்த்துவிட்டு வரும்படி ஏழெட்டுப் பெண்களை அனுப்பிச்சாளாம் — மூணு நாலு மாசம்; எல்லாம் சர்க்கார் செலவு—சுற்றிப்பார்த்துண்டு நேரா, இன்னைக்குத்தான் வந்தா— உள்ளே, தூங்குறா! அவளுக்கு, இன்னும் இரண்டு மாசத்திலே கலியாணம்டீ. துளசி — கறிகாய் எல்லாம் பெங்களூரிலே இருந்துதான் வரும், அதனாலே உன்னை மறந்துடுவேன்னு நினைக்காதே. உனக்கும், 'ஆர்டர்' தர்றேன்; மாப்பிள்ளை யார் தெரியுமோ? டில்லியிலே, சர்க்கார் உத்யோகத்திலேயிருக்கான்! மாதம் ரூபாய் 500 சம்பளம்!..."

அய்யங்காரின் குரல், அந்த அக்ரகாரம் முழுதுமே கேட்கும் போலிருந்தது. அவ்வளவு சுவாரஸ்யத்துடன், விளக்கினார்! இதைக் கேட்ட துளசிக்கு ஒன்றும் புரியவில்லை! சரி, எதுவோ, எப்படியோ போகிறது — நமக்கென்ன என்று திரும்பிவிட்டாள் — ஆனால், அஞ்சலை அன்று சாயங்காலமே தேடிக்கொண்டு வந்துவிட்டாள்! ஏனெனில், அய்யங்கார் அவளை அன்றைய தினத்திலிருந்து வேலையிலிருந்தும் நிறுத்திவிட்டார்! அந்த ஆத்திரத்தைக் கொட்டிக்கொள்ள வேண்டும்—அதே சமயத்தில், அக்கா! கொஞ்சம் நெறிக்காதே! எப்படியாவது உங்கிட்டே வாங்கினதை கொடுத்துடறேன்! கொஞ்சம் பொறுத்துக்கோ என்று சொல்லி, மேலும் கொஞ்சம் கேட்க வேண்டுமே — அதனால், வந்தாள். வந்தவள், எல்லாம் நிஜம் அக்கா—காலேஜ்லே படிக்கிறேன்னு போன பொண்ணு எவனோடேயோ ஓடிப்போயி ஏழெட்டு மாசமாயிட்டுதாம் — எங்கே போச்சுன்னே தெரியலியாம்—அதை வெளிக்குக் காண்பிக்காமே, அங்கே படிக்குது படிக்குதுன்னு சொல்லிக்கிட்டு இருந்திருக்காங்க — கடைசியிலே, எப்படியோ, தகவல் கிடைச்சு பெண் இருந்த இடத்துக்குப்போய் அதை அழைச்சுகிட்டு வந்திருக்காங்க—நிறை மாசம்போல இருக்கு —பாபம்! அந்தப் பெண்ணைப் பார்க்க பரிதாபமா இருக்கு!" என்றாள், அஞ்சலை.

"சரி, அஞ்சலை! ஊர்வம்பு நமக்கெதுக்கு? வீட்டுக்குப் போ!" என்று சொல்லிவிட்டு, குடிசைக்குள் நுழைந்த துளசிக்கு நீண்ட நேரம் தூக்கம்வரவில்லை. கன்னிப்

## இஸ்லாமும் தென்னாடும்

—★—

தெ. இ. மு. க. ச. பொன் விழாவின் துவக்க நாளன்று முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முஹம்மது இஸ்மாயீல் எம். பி. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில் பின் வருமாறு கூறினார்.

"தென்னிந்திய முஸ்லிம்கள் எக்காலத்திலும் இப்பகுதியைச் சேர்ந்த மக்களின் கலாச்சார தேசிய வாழ்வில் இரண்டறக் கலந்தே வந்திருக்கின்றனர். இந்நாட்டிலேதான் முதன் முதலாக இஸ்லாம் பரவியது. அதுவும். நபிகள் நாயகம் உயிர் வாழ்ந்த காலத்திலேயே வந்துவிட்டது! மேற்குக் கரையோரங்களிலும், கிழக்குக் கரையோரங்களிலும், இந்தியாவின் தென் கோடியிலும் இஸ்லாம் முதன் முதலில் பரவியது. வர்த்தகர்கள், சன்மார்க்கப் பிரச்சாரகர்கள் இவர்களின் மூலமாகத்தான் சமாதான முறையில் இஸ்லாம் இங்கே பரவியது, பண்டைக் காலத்தின் சர்வதேச இந்திய சரித்திரம் என்பது, உண்மையில் தென்னிந்தியாவைப் பற்றிய சர்வதேச வரலாறு என்றே கூறுவேன். முதலில் ரோமானியர்களும், கிரேக்கர்களும், பின்னர் அராபிய வர்த்தகர்களும் இங்கே வந்தனர். சிலப்பதிகாரம் புகழ் காவிரிப்பூம்பட்டினந்தான் இவர்கள் முதலில் கலந்துறவாடிய இடம். அராபியர் போன்ற அன்னிய நாட்டு வர்த்தகர்கள் இந்நாட்டிலே குடியேற. பாண்டிய மன்னர்களே ஆதரவளித்தனர்; மேற்குக் கரையைச் சேர்ந்த சேரன் பெருமாள் என்னும் மன்னர் நபிகள் நாயகத்தின் காலத்திலேயே ஒரு முஸ்லிமாகிவிட்டார்."

இந்தியச் சரித்திரத்திலிருந்து முஸ்லிம்களின் நாட்டுப் பற்றை விளக்கும் நல்ல நிகழ்ச்சியொன்றை ஜனாப் முஹம்மது இஸ்மாயில் எடுத்துக் கூறினார்.

"அலாவுத்தீன் கில்ஜியின் தளபதியான மாலிக்கபூர் என்னும் வீரன் மதுரையைத் தாக்க வந்தபோது, பாண்டிய மன்னனின் தற்காப்புப் படையில் முஸ்லிம்களே முன்னணி வீரர்களாக விளங்கினர். இவர்கள் அந்தத் தளபதிக்குப் பணிந்துவர அறவே மறுத்துவிட்டதைக் கண்டு மாலிக் கபூர்பின் வாங்கி ஓட்டம் பிடிக்க நேர்ந்தது!"

—"தமிழ் முரசு"

பெண்! வயிற்றிலே கர்ப்பம்! எப்படியாவது, இதை வெளிப்படுத்திவிடவேண்டும் — பழிக்குப் பழி வாங்கிவிடவேண்டும் — என்னே, எப்படியெல்லாம் அவமானப்படுத்தினுன் —ஏழை சாதிங்கிறதாலே, அவன் கூட சேர்ந்து பெரிய மனுஷனெல்லாம் எப்படியெப்படி 'கூட்டம்' சேர்ந்து வேலே செஞ்சாங்க—இப்படியெல்லாம், எண்ணிஞள்! காலே மலர்ந்ததும், இந்த விஷயத்தை சந்திசிரிக்கும்படிச் செய்யவேண்டும் என்கிற திடமுடிவுக்கும் வந்தாள். என்மீது எவ்வளவு ஈட்டிகளே எடுத்தெறிந்து படாதபாடுபடுத்திஞர்! ஈனஜென்மம்—ஆண்டவன் கூலி கொடுக்காமல் போகமாட்டார் —இதுகளால்தான் மழை கூடப் பெய்வதில்லே—சனியன்கள்! —இப்படி பிழைக்கிறதும் ஒரு பிழைப்பா —அப்பப்ப, எப்படியெப்படியெல்லாம் ஏசிஞர். இப்போது, என்ன சொல்வார்? ஏழை கூட அல்ல! காசுக்காக உடம்பை 'மாசாக்கிக் கொள்ளவேண்டிய அவசியம் கூடக் கிடையாது! ஏன், இப்படி ஆஞள், அவரது மகள்? இதைச் சந்தி சிரிக்கவைக்கவேண்டும், என்று எண்ணியபடியே கண்களே மூடிஞள்!

## 3

காலே, மலர்வதற்கு அறிகுறியாக காக்கை கத்திற்று—விடிவெள்ளி முளேத்தது—அவளுடைய தினசரி உத்யோகத்துக்குப் போகவேண்டுமே! கூடையை எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குள்போய், காய்கறிகளேப் பறித்தாள். கூடை நிரம்பிவிட்டது! எடுத்துக் கொண்டு குடிசைக்குள் நுழையும் சமயம். குழந்தையொன்று அழும் சப்தம் அவள் காதில் ஒலித்தது! குடிசைகளில் குழந்தைகளுக்கா பஞ்சம்? எங்கோ அழுகிறது—எவளாவது, வேலேசெய்துகொண்டிருப்பாள்—என்று எண்ணிக்கொண்டே உள்ளே செல்ல எடுத்தடிவைத்தாள். குழந்தையின் அழுகுரல், வெகு சமீபத்தில் கேட்பதுபோலிருந்தது. கூடையைக் கொண்டு போய், வீட்டுக்குள் வைத்துவிட்டு, கொஞ்சம் பசியாறலாமே என்று பழைய சோற்றை எடுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள். குழந்தையின் சப்தம். இப்போது இன்னும் அதிகமாகக் கேட்டது! என்ன இருந்தாலும் பெண்ணல்லவா? அவளால், அந்தச் சப்தத்தைக் கேட்டுக்கொண்டு சாப்பிடமுடியவில்லே. எங்கே இப்படி அழுகிறது போய்ப் பார்க்கலாம் — என்று கையை கழுவிவிட்டு வெளியே வந்தாள். தன்னுடைய தோட்டத்தின் மூலேயில், அழுவதுபோல் கேட்டது. ஆச்சரியம் அதிகமாயிற்று, துளசிக்கு! சிறு ஆடு நுழைந்தால் கூட சண்டைக்குப் போய்விடுவாள் —அதனுல் அவள் தோட்டம் என்ருல் அக்கம்பக்கத்திலிருப்போர், அஞ்சுவார்கள். ஒரு வேளே! சின்னஞ் சிறு குழந்தை விளேயாடிக் கொண்டே தோட்டத்துக்குள் வந்துவிட்டதோ? "இருக்கும், இருக்கும்!" என்று கோபத்துடன் வெளியே வந்தாள். குழந்தையின் குரல் கேட்கும் திசை நோக்கிச் சென்ருள்.

தக்காளிச் செடிகளின் நடுவே, ஒரு பழங்கந்தலின்மீது ஒரு பச்சைக் குழந்தைக் கதறிக்கொண்டு கிடந்தது. பிறந்து கொஞ்சநேரம் தான் இருக்கக்கூடும்! சொர்ணபிம்பம்—சொகுசுத் தங்கம் — என்று சொல்லலாம். அவ்வளவு அழகு. குழந்தையைக் கண்ட துளசியின் உள்ளம் துடித்தது. இருகையாலும் வாரியெடுத்து, அணேத்துக்கொண்டாள்! பெண்மைக்கும் அன்புக்குமிடையே இவ்வளவு நெருக்கம் இல்லேயென்ருல் உலகமே இல்லே என்று சொல்வது எவ்வளவு உண்மை. 'அழாதேடா, என் ராசா' என்று கொஞ்சியபடியே, குழந்தையைப் பார்த்தாள் — 'யார் தங்கம் உன் அப்பா அம்மா? எந்தவீட்டுக் குழந்தை நீ!' என்று கேட்டுத் தெரிந்துகொள்ளவா முடியும்? குழந்தையை அணேத்தபடி, வெளியே வந்துபார்த்தாள்! சுற்றுமுற்றும் பார்த்தாள். பக்கத்திலே ஓடிக்கொண்டிருந்த சாக்கடையைத் தாண்டிக்கொண்டு ஒரு உருவம் வேகமாக மறைந்துகொண்டிருந்தது. மூடுபனி இருந்தும், அந்த உருவம் யார் என்பதை வெகு எளிதில் கண்டுகொண்டாள், துளசி· குழந்தையை ஏந்திகொண்டு, அந்த உருவத்தின் பின்னலேயே, சென்ருள். அந்த உருவம், அப்பளாச்சாரியின் வீட்டுக் கொல்லேப்புறமாகச்சென்று வாயிலில் எடுத்தடி வைக்கவும், துளசி "நில்லுங்க, சாமி!" என்று அதட்டவும் சரியாக இருந்தது. அப்பளாச்சாரியார், விழித்தார்! திகைத்தார்!

"என்ன சாமி, இது! ஊம்....., பச்சைக் குழந்தையைப் போட்டு விட்டு ஏன் இப்படி ஓடி வர்றீங்க?"

"ஏது குழந்தை! நான் போட்டேனுவது? என்ன சொல்றே நீ?"

"இந்தப் பசப்பெல்லாம் பலிக்காது, சாமி—எனக்கு எல்லாம் தெரியும். மூத்த பெண்ணுக்குப் பிறந்த பேரன்தானே, இவன்"

அப்பளாச்சாரியாருக்கு முகமெல்லாம் வியர்த்தது—துளசி எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிருள் விஷயத்தை—நேரம் நீண்டால் விஷயம் விரசமாகிவிடும் ஏன்பதைப் புரிந்துகொண்டார்.

"துளசி! வெளியே நின்னுகிட்டு சத்தம் போடாதே-இப்படி உள்ளே வா...எல்லாத்தையும் சொல்றேன் உள்ளே வா......"

"நான் கீழ் சாதி சாமி; அதிலும் கெட்டுப் போனவ; உள்ளே வரக் கூடாதுங்களே!"

"அதெல்லாம் பரவாயில்லே, துளசி—சும்மா வா"

அவள் உள்ளே நுழைந்ததும் பல்லெல்லாம் தெரியக் காட்டி கெஞ்சிஞர் — "பார் துளசி, பார் என் பெண்ணே; இந்த வயசிலே அவளுக்கு இப்படியொரு கதி ஏற்பட்டதுன்னு வெளியே தெரிஞ்சா, என்ன ஆகும்? எவன், இவளேக் கட்டிக்க வருவான்? ஆயுசு பூரா வும் வாழாவெட்டியாயிருந்து அவதிப்படத்தானே வேண்டும் — அப்படி உண்டாகணும்னு விரும்புறியா—என் மகளே ஊர் உலகத்

## பலே ஆள்!

புதுத் தம்பதிகள் அவர்கள். ஒரு நாள் அவர்களுக்கு ஓர் அழைப்பு வந்தது—நகரில் நடைபெறும் நாடகம் ஒன்றைக் காணும்படி. அதற்கான இலவசச் சீட்டு இரண்டும் வைக்கப்பட்டிருந்ததோடு, "இவைகளே அனுப்பும் நண்பன் யார் என்பதை நீங்கள் பிறகு தெரிந்துகொள்ளலாம்" என்றும் ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது.

இரவு வந்ததும், இரு புதுப்புருக்களும், ஆனந்தமாக நாடகத்துக்குப் போய்விட்டு, வீட்டுக்குத் திரும்பினர். ஆனுல்! அவர்களுக்கு வந்த திருமணப் பரிசுகள் உட்பட, எல்லா சாமான்களும் களவுபோயிருந்தன. அதோடு, "இப்போது நீங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம், அந்த நண்பன் யார் என்று!" என்றும் ஒரு துண்டுக் கடிதமும்வைக்கப்பட்டிருந்தது. 'டைஜஸ்ட்'

"தலைவிதி தனைப்படைத்துத் தகாத வேட்கையூறும் உள்ளம் தந்து, தரணியில் தாங்கொணா வறுமையில் விட்டு பின்னர், நற்கதி உனக்கில்லை—நரகந் தான், நரனே! என்றால், தலைவிதிதனை எழுதிய நாயனே! தவறுகள் யாருடையது? பச்சைக் குழந்தையோநீ? பாவிநீ விளைத்த தீவினைகள் தீர, உன் கன்னத்தில் அறைவேன்! செல்லடா, நரகத்துக்கே!'

—உமர்கய்யாம்.

திலே இருக்கிறவங்க காரித் துப்பு வாங்களே, துளசி — அப்படி ஏற்படணும்னு நினைக்கிறீயா?" என்றார், அழுத குரலுடன்.

துளசிக்கும், மனம் இளகலாயிற்று. என்றாலும் துணிவுடன் சொன்னாள், "ஆமாம் ஐயரே! அதெல்லாம் உமக்கு ஏற்படணும்னுதான் விரும்புறே..."

'ஐயோ!"

"இப்ப, எப்படி கலங்குது மனசு இதுபோலத்தானே, ஊராரைத் தூண்டிவிட்டு என்னைப் போலீசு ஸ்டேஷனிலே கொண்டுபோய்ப் பூட்டியபோது என் மனசு கலங்கியிருக்கும்? கொஞ்சமாவது ஈவு இரக்கம் காட்டினீரா? வேசி—விபசாரி—சனியன்—நல்ல பாம்பு — என்னென்ன சொன்னீங்க, என்னை! இப்ப, உங்க பெண்ணுமட்டும் யாரு? இல்லே, ஐயரே! உம்மைத்தான் கேட்கிறேன்; உங்க பெண்ணு யாரு?"

"கொல்லாதே துளசி! என்னைக் கொல்லாதே......உன் காலில் வேண்டுமானாலும் விழறேன். என்னைக் காப்பாத்தறது உன் கையிலேதான் இருக்கு" என்று துவண்டார்—துடித்தார் — அவள் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினார். வேதாந்த சிரோன்மணி.

துளசி, நிமிர்ந்து பார்த்தாள். அடுப்பங்கரைக்குப் பக்கத்திலே அலங்கோலத்துடன் கிடந்த சந்திரிகா தென்பட்டாள். அந்த நிலையில், அவள் பார்த்த பார்வை துளசியின் மனதை என்னவோ செய்வது போலிருந்தது. அய்யரைப் பார்த்தாள்—அவருடைய மனைவி, கண்கலங்க நிற்பதையும் பார்த்தாள், "அய்யர் சாமி! கெட்டுப் போன நான், கெட்டுப்போன உம்முடைய பெண்ணைப்பற்றி ஊர் உலகத்துக்கு விளம்பறப்படுத்தறதாலே, எனக்கொண்ணும் லாபம் இல்லே — ஆனாலும், ஏழைங்கிறதாலே என்னைப் படுத்தினபாட்டை எண்ணிப் பாருங்க. நான் ஈனஜன்மம்தான்; இல்லேன்னு சொல்லலே. ஆனா, நான் இந்தப் பாழும் வயிற்றை நிரப்பறதுக்காகக் கெட்டுக் கிரைவழியானேன். உங்க பெண்ணுக்கு என்ன குறைச்சல்? இந்த வயசிலே ஏன் இப்படி ஆச்சு? சொல்லுங்க சாமி—யார் ஈன ஜென்மம்—யார் நெறியோடெ இருக்கறவங்க—ஏழைங்க, சிறு குற்றம் செஞ்சுட்டாலும் அதை மலையத்தனையாக்கி உங்க பெரிய மனுஷத்தன்மையைக் காப்பாற்றிக்க நினைக்கிறீங்களே ஒழிய அந்த ஏழையின் மனசு, அப்பொ, என்ன பாடுபடும் என்கிறதை நீங்க படிக்கிற வேதம் சொல்லித் தரலியா? சாமி! கண்ணைத் துடைக்காதிங்க —துடைக்க வேண்டியதெல்லாம் உங்க மனசுக்குள்ளே இருக்கு. என்னை எத்தனை தடவை, ஜாதிகெட்டவ, கீழ்சாதிக் கழுதை, என்றெல்லாம் திட்டியிருப்பீங்க. இந்தக் கீழ்ஜாதிக்கு இருக்கிற கண்ணியத்தை இனிமேலாவது தெரிஞ்சுக்குங்க—இருதயம், எங்கேயிருக்குது என்கிற உண்மையை இப்போதாவது தெரிஞ்சுக்குங்க......" என்று சொல்லிவிட்டு, அவருடைய பதிலையும் எதிர்பார்க்காது, குழந்தையை மார்போடு அணைத்தவளாக 'விர்' என்று போய்விட்டாள், தன் குடிசைக்கு. குழந்தை, துளசியிடம் 'கொழுகொழு' வென்று வளர்ந்து கொண்டிருக்கிறது! 'ஏது' என்று கேட்பவர்களிடம் விலைக்கு வாங்கினேன்—என்றே சொல்கிறாள், துளசி!! திகைத்துப்போன அய்யரோ, அன்று முதல், திக்பிரமை பிடித்தவர்போலாகி, துளசியைப்போலுண்டோ? துளசி! நீயே, என் தெய்வம்! நீ, என் மானத்தைக் காப்பாற்றினாய்! உன்னை ஒருநாளும் மறக்கமாட்டேன்! என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார். ஊரிலிருப்பவர்கள், வேதாந்த சிரோன்மணி சதா, துளசிதாசைப் பற்றியே பிரேமையாகயிருக்கிறார்—பாருங்கள்! எப்பொழுது பார்த்தாலும், துளசி நீயே என் தெய்வம் —என்று சொல்லுகிறார் என்று பேசுகிறார்கள்! ஆனால், உண்மை, இரண்டு மாதத்துக்குப் பிறகு கணவனொருவனுடன் கைபிடித்துக் கொண்டு சென்றாளே சந்திரிகா! அவளுக்கும், அவள் அன்னைக்கும் தான் தெரியும். அந்தக் குடும்பத்தின் மனதில், நீங்காத இடம் பெற்றுவிட்டாள், அந்த 'ஈனஜென்மம்!!'

★

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

ஏஜண்டுத்தோழர்கள் பலர் தங்கள் பாக்கியை ஒழுங்காக அனுப்பாமல் இருப்பதுடன், காலங்கடந்தும் சிறு சிறு தொகையாக அனுப்பியும் வருகிறார்கள். இம் முறையைக் கையாளும் ஏஜண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவைக்க வேண்டியும் நேரிடுகிறது. பிறகு, வருத்தப்பட்டு, கடிதம் எழுதுகிறார்கள்.

ஆகையால், இனிமேலாவது இந்தவிதமான தொல்லைகள் ஏற்படாத வகையில், ஒவ்வொரு ஏஜண்டும் தன்னுடைய பாக்கியைப் பட்டியல் கிடைத்த ஒரு வாரத்துக்குள் அதாவது பிரதி மாதமும் 10-ந் தேதிக்குள் முழுத் தொகையையும் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்தாந் தேதிக்குள் பாக்கி முழுவதும் அனுப்பத் தவறும் ஏஜண்டுகளுக்கு எந்தவித முன் அறிவிப்புமின்றிப் பத்திரிகை அனுப்புவது கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி
"திராவிட நாடு"

# கேரளக் குரல்!

அன்புடையீர்!

கேரளப் பகுதியில் வாழ்வோர், இணைந்து நின்று இயக்க ரீதியில் பணியாற்றவில்லையே தவிர, நமது உண்மையான இலட்சியங்களை, அனுபவத்தின் காரணமாக அவர்கள் கண்டறிந்து, அவ்வப்போது குரல் எழுப்பியே வருகிறார்கள்.

தாங்கள் (பெரம்பூர் கூட்டத்தில் என்று நினைக்கிறேன்) கூறினீர்கள் கேரளம், இன்று மலராத மொக்காக இருக்கிறது; நாளை மலரும் என்ற எண்ணத்தோடு இருக்கிறோம் என்று,

கேரளமாகிய இந்த மலர், நிச்சயமாக மலரும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. "கேரள கௌமுதி" என்ற மலையாள தின இதழைப்பற்றி தாங்கள் அறிந்திருக்கலாம். திரு-கொச்சியின் முக்கிய தின இதழ்களில் இதுவும் ஒன்று. தினம் இருபத்தையாயிரத்திற்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகும் இதழ். கேரள மக்கள் விரும்பிப் படிக்கும் தின இதழ் இது, திரு-கொச்சி ஆட்சிபீடமே ஆட்டம் கொடுக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்த இதழ். நாராயண குருவின் உண்மையான வாரிசுகளும், அரசியல் துறையிலே செல்வாக்குப் பெற்றவர்களும் பழம் பெரும் தலைவர்களும் சேர்ந்த ஒரு குடும்பத்தாரால் நடத்தப்படும் இதழ், இந்தக் கேரள கௌமுதி. இதன் தமிழ்ச் சொல், கேரளபிறை என்பது. கௌமுதி என்பது சந்திரனைக் குறிப்பது.

சுமார் நான்கு ஆண்டுகளாக இடையிடையே நமது இலட்சியமாகிய வடநாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, வடநாட்டுச் சுரண்டல் எதிர்ப்பு, இவை பற்றி தலையங்கங்கள் தீட்டி, கேரள மக்களை உணர்த்தியும் வருகிறது, ஆரிய மேதாவித் தன்மை நம் நாட்டை நாசமாக்குகிறது; அது ஒழியவேண்டும், பிராமணீயம் நசுங்கவேண்டும் என்று பச்சையாகவே எழுதுகிறது, இந்த இதழ்.

தாங்கள் கேள்விப்பட்டிருக்கலாம், முன்னாள் இங்கு முதன் மந்திரியாயிருந்த சி. கேசவன் என்பவரை. சி. வி. குஞ்சுராமன் என்றொரு மேதாவியும் இருந்தார். பெரியார் அவர்களுக்குத் தெரியும் இவரைப்பற்றி. இவர்களெல்லாம் ஒரு குடும்பத்தவர்கள். இவர்கள் குடும்பப் பத்திரிகைதான் இந்தக் கேரள கௌமுதி. தற்போது இதன் ஆசிரியர் கே. சுகுமாரன்—காலம்சென்ற சி. வி. குஞ்சுராமனின் மகன்.

சமீபத்தில் ஒரு வாரத்திற்கு முன் தீட்டிய ஒரு தலையங்கத்தின் கடைசிப் பகுதியில், தமிழ்நாட்டில் படர்ந்து வீசிக்கொண்டிருக்கும் திராவிட இயக்கத்தின் தீச்சுடர்கள் இந்தக் கேரளத்திலும் விரைவில் படர்ந்து பிடிக்கும் என்று எச்சரித்துள்ளது கேரள மக்களை. அண்ணா, ஒரு பத்திரிகை இவ்விதம் தீட்டிவருகிறது என்றால் அதை நடத்துபவர்களின் மனப்போக்கு உண்மையாகவே நமது அடிப்படையான இலட்சியத்தில் உறைந்திருக்க வேண்டும். காலம் வரும் என்றுணர்ந்து அவ்வப்போது மக்களுக்கு உணர்ச்சியூட்டி வருகின்றனர், அவர்களால் இயன்றவரை. இவர்கள் மக்கள் மன்றத்திலே உன்னதமானவர்கள்.

இங்கு முன்னாள் அமைச்சராயிருந்தவர் கே. அய்யப்பன், இவரைப்பற்றியும் தங்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். முன்பு சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக்கொண்டிருந்தவர். சமூக சீர்திருத்தத்தில் நம்மோடு இணைந்து வருபவர். முன்பொருமுறை சுயமரியாதை மாநாட்டிலும் கலந்துகொண்டு, மலையாளத்தில் பேசியிருக்கிறார் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். 1947-ல் திருவிதாங்கூரில், காங்கிரஸ் மந்திரிசபை அமைத்தபோது அதில் மந்திரிபதவி வகித்து பின் காங்கிரஸிலிருந்து மாறி, தற்போது எர்ணாகுளத்திலிருந்துகொண்டு பத்திரிகை வாயிலாக நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்து வருகிறார். அவர் நடத்தும் பத்திரிகை "சகோதரன்" என்ற மலையாள வார இதழ். சமூகத்தின் சீர்கேடுகளைச் சாடுவதைப் பார்த்தால் நமது நரம்புகளெல்லாம் முறுக்கேறும். அவ்வளவு சீர்திருத்த எண்ணமுடைய ஏடாக நடந்து வருகிறது. அந்த இதழின் இந்த வாரத் தலையங்கத்தில், தீட்டியிருக்கும் அரசியல் கருத்துகளைப்பார்த்தால் காங்கிரஸில் இருந்த திரு. அய்யப்பன்தானா இப்படி எழுதுகிறார் அல்லது நமது கழக ஏடுகளில் இது ஒன்றா என்றே எண்ணத்தோன்றிவிடும். வடநாட்டிலிருந்து வருகிற (சோட்டா நேதாவு) சின்னத் தலைவர்களுக்கெல்லாம் இங்கு வழிநெடுக வரவேற்பும், முனிசிபாலிடிகளில் மங்களபத்திரம் வாசித்தளிதல் பணக்கிழிகொடுத்தல் முதலான அடிமை மனப்பான்மையான வேலைகளை நாம் செய்கிறோம். ஆனால் தென்னிந்தியாவிலிருந்து எந்தப் பெரிய தலைவரானாலும் உதாரணமாக இராஜகோபாலாச்சாரியார் கூட, வடநாட்டிற்குச் சென்றால் அங்குள்ள தென்னிந்தியர்களைத் தவிர இவர்களை யாரென்று கேட்கக்கூட நாதியில்லை என்றும், இந்தி மொழியை தென்னிந்தியர்களாகிய நம்மீது திணிப்பது பற்றியும், இன்னும் பல விதமான வடநாட்டுச் சுரண்டல் பற்றியும், வடக்கே இம்பீரியலிஸமும் தெற்கே சமதர்மமும் என்ற தலைப்பிட்டு அழகாகத் தீட்டியுள்ளது.

இவர்கள் குரல் இன்று நமது பாணியிலே ஒலிக்கிறது என்றால் கேரளம் நிச்சயம் மலரும்; கருகிவிடாது என்று எண்ணத்தானே தோன்றுகிறது.

நமது பணி பாழாகாது; நிச்சயமாக நாம் நினைக்கும் பலனைத் தரும் என்று, அல்லும் பகலும் அயராது பாடுபடும் நமது தமிழ்நாட்டு இயக்கத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருவனந்தபுரம் | 13–10–55. | அன்புள்ள C. P. செல்லம்.

★

## தந்திரம்!

கடை வைத்து வெகுநாளாகியும் ஒரு வியாபாரிக்கு வருமானமில்லை! உடனே அவன் ஒரு தந்திரம் செய்தான்—'அலாரம்' கடிகாரம் ஒன்றை வாங்கி, ஒரு மறைவான இடத்தில் துணியைப் போட்டு மூடிவைத்துவிட்டு —அது எப்போது மணி அடிக்குமோ; அந்த நிமிஷ முதல் ஒருமணி நேரம் இலவசமாகப் பொருள்கள் தரப்படும் என்று விளம்பரம் செய்தான்!! பிறகு கேட்பானேன், அந்தப் பாக்கியம் நமக்குக்கிடைக்காதா என்று ஒவ்வொரு நாளும் ஏராளமான மக்கள் அவன் கடைக்கே சாமான் வாங்கச் சென்றனர்.

வீரனும் நானும்

# தட்சிண ராஜ்யம்!

### சலிப்பு

இப்போது தான் வரவர என்ன நடக்கிறது? ஒரு ஜவஹர்லால் நேருவையும், ஒரு ப்ளானிங் கமிஷனையும் எதிர்பார்த்துத்தான் எல்லாம் நடக்கிறது. ஆண்டுதோறும் செய்யவேண்டிய தீராத செலவுகளை மாற்ற வழியில்லை மற்றப் புதுகாரியங்களில் எல்லாம் ப்ளானிங் கமிஷன் போட்டுவரும் ஐந்தாண்டுத் திட்டமும், அதற்கு என்று 'மேலா'வில் போட்டுத் தரும் செலவுத் திட்டமுமே ராஜ்ய நிர்வாகம்போலத் தோற்றமளித்து வருகிறது. ராஜ்ய சட்டசபைகளில் போட்டுக்காட்டும் பட்ஜெட்டுகள் வெறும் நிழற்படங்கள்தான்! எதற்கும் தில்லிக்கு விமானம் ஏறிச்சென்றுதான் விஷயங்கள் விவாதிக்கப்பட்டு முடிவாகின்றன.

### யோசனை

இந்த நிலை சரியல்ல. ராஜ்ய நிர்வாகத்துக்கும், மாகாண சட்ட. சபைக்கும் மாகாண மந்திரிசபைக்கும் உண்மையான சுதந்திரமும் செல்வாக்கும் இருக்கவேண்டும் என்று கோரினோமானால், இப்போது ஆலோசனை செய்யப்பட்டுள்ள குட்டி ராஜ்யங்கள் அதற்கு உதவாது. பம்பாய், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், இவற்றுக்குச் சமானமான விஸ்தீரணமும் ஜனத்தொகையும், வருமானமும் தென்மக்கள் வாழும் பிரதேசத்துக்கும் இருக்க வேண்டும்.

### நம்பிக்கை

இது வரையில் சென்னை ராஜ்யமாக இருந்த பிரதேசமும், மைசூரும் திருவாங்கூரும் கொச்சியும் சந்தேகங்களையும் பூசல்களையும் உதறித் தள்ளிவிட்டு ஒன்று சேர்வதில் என்ன கஷ்டம்! ஒரே லிபி வடிவத்தில் எழுதினால் கன்னடமும் மலையாளமும் தமிழும் ஒரே பாஷைதான், இம் மக்களின் பண்பாடு படிப்பு, மனோபாவம் கோயில் குளம் எல்லாம் ஒன்றே. ஸம்ஸ்க்ருத பாஷையோடு ஒட்டிய பிராக்ருத பாஷைகள் வடக்கே பிரயோகத்தில் இருப்பதுபோல, இந்தத் தென் பிரதேசத்தில் தமிழும், தமிழின் இன மொழிகளுமே மக்களின் தாய்மொழி...... மாமன் மகனும், அத்தை மகளும் திருமணம் செய்துகொள்ளலாம் என்ற தக்ஷிண ஆசாரத்தைக் கடைப்பிடிக்கும் மக்கட் தொகுதிதான் இவர்கள் அனைவரும். எல்லா விதத்திலும் ஒரு கூட்டம். யோசித்துப் பார்த்தால் என்ன பேதம் உண்டு?

### மிரட்டல்

பிரிந்துபோன தெலுங்கர்களை மறுபடியும் வாருங்கள் என்று நாம் அழைக்கவேண்டாம். அவர்களாக வந்தால் வரட்டும்,எப்போது வந்தாலும் வரட்டும். நாம் வற்புறுத்த வேண்டியதில்லை.

### திட்டம்

தென் ராஜ்யத்துக்கு ஒரு கவர்னரும் ஒரு சட்டசபையும் பத்துப் பேர் அடங்கிய ஒரு மந்திரி சபையும் போதும், பிரதேச உட்பிரிவுகளுக்கு ஏற்ப உதவி மந்திரிகள் இருக்கலாம். தற்போது, ரெவின்யு, கல்வி, சுகாதாரம், விவசாயம், என்று வெவ்வேறு இலாகாக்களுக்கு மந்திரிகள் இருப்பது போல, மங்களூர் மந்திரிகள், தமிழ் நாட்டு மந்திரிகள், மலையாள மந்திரிகள், திருவாங்கூர் மந்திரிகள், மைசூர் மந்திரிகள் என்று அந்தந்தப் பிரதேசத்துக்கு ஏற்ற எண்ணிக்கையில் மந்திரிகள் இருந்து வரலாம்.

### பயம்

தமிழுக்கு ஆபத்து வந்துவிட்டது என்று எண்ணி, அதை ஆபத்தினின்று மீட்டு அதற்குச் சேவை செய்வோம் என்கிற நோக்கத்தைக்கொண்டு தென்னாட்டைத் துண்டு துண்டாகப் பிரித்து அதன் அரசியல் நிலைமையைத் தாழ்த்திவிடச் சம்மதிக்கலாகாது ........சென்னை ராஜ்யத்தை மதிப்பிழந்த குறு நிலமாக ஆக்கிவிட வேண்டியதில்லை.

### புத்திமதி

சின்னஞ்சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு அமைந்தால், தேர்தல் போட்டிகளில் வெற்றி பெறுவது எளிது என்றும், நிர்வாகத்தைச் சுலபமாக நடத்தவும் செய்யலாம் என்றும், சிறுமையில் ருசிகண்டு ஏமாந்து போனோமானால், முடிவில் எல்லோருமே பலவீனர்களாகப் போகவேண்டியதுதான். பிறருடைய தயவை அண்டிப் பிழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். பாடுபட்டுத் தியாகங்கள் செய்து பெற்ற சுதந்திரம் யதேச்சாதிகாரமாக முடியும். அந்த நிலைமை ஏற்பட்டுவிட்டால், பிறகு திருத்தமுடியாது. அதற்கு இடம் கொடுக்காமல் இப்பொழுதே விழித்துக்கொள்வதுதான் புத்திசாலித்தனமாகும்"

* * *

"பார்த்தாயா, நண்பா, இதைப் பார்த்தாயா" என்று பரபரப்புடன் ஓடிவந்தான், வீரன்; அக். 23ந்தேதி 'கல்கி' இப்படி ஒரு தலையங்கம் யிருக்கிறதாம்.

"என்ன வீரா! இப்படி தலைப்புகள் கொடுத்தா, 'கல்கி' தலையங்கம் எழுதியிருக்கிறது?"

"கல்கி கொடுக்குமா? நான்தான் கொடுத்தேன்—ஏன் சரியில்லை என்கிறாயோ"

"அப்படிச் சொல்வேனா நான்—சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறாய், தோழனே. அந்தத் தலையங்கத்தை யார் தீட்டியிருப்பார் என்று கருதுகிறாய்?"

"தெரியவில்லையா — 'அஞ்ஞாதவாச ஆசிரியர்' ஆச்சாரியராகத்தானிருக்கும். எப்படி ஆரம்பித்து எப்படி முடிகிறது பார்த்தாயா—நேருவைக் கண்டிப்பதுபோலத் தொடங்கி, கடைசியில் தட்சிண ராஜ்யம் அமைக்கவேண்டும் என்கிற ஆலோசனையில் முடிந்திருக்கிறது"

"அந்தத் தட்சிண ராஜ்யமும், பாரத நாட்டிற்குள், கட்டுப்பட்டு இருக்கவேண்டும் என்றல்லவோ சொல்கிறார்?"

"வேறென்ன சொல்வார்! டில்லி ஆதிக்கம் அது இது என்று சொல்வது, சலிப்பின் காரணமாக. சலிப்பு தாண்டியதும், பாரதம் வந்து நிற்கிறது, கண்ணே திரே!

எவ்வளவுதான் எழுதினாலும், பேசினாலும், அந்தப் புத்தி போகுமோ தோழா?"

"ஆனால், ஆந்திரம்—கேரளம்—கன்னடம், தமிழகம் நான்கு மொழியின் அடிப்படையிலும் கலாச்சார ரீதியிலும் ஒன்று, என்று எப்படி வாதாடியிருக்கிறார், பார்த்தாயா?"

"ஆமாம்! இந்த ஒற்றுமையைப் பற்றி இத்தனை நாளும் நாம் பேசிய போது, ஆகுமா, தகுமா, முடியுமா, இயலுமா, என்று கேள்வியும் கிண்டலும் வீசிய கல்கிதானே, இது!"

"கல்கி, என்ன! சட்டசபைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் கோபாலமேனன் என்பவர் அக் 19ந் தேதி பேசியிருப்பது 'இந்து'வில் வந்ததே பார்த்தாயா?"

"மலையாளத்துக்கும் மற்ற தென்னிந்திய பிரதேசங்களுக்கு முள்ள ஒற்றுமையை அலசி அலசிப் பேசியிருக்கிறார்!"

"மலையாளிகளுக்கு மலையாளம் மட்டும்தான் தெரியும் என்பதில்லை. எங்களில் சிலருக்கு, தமிழும், படிக்கத்தெரியும், நன்றாகப் பேசவும் தெரியும். தமிழென்ன! தெலுங்குகூடத் தெரியும்......"

"ஆமாம்! அப்படிச் சொல்லியதோடு, இப்படிப்பட்ட ஒற்றுமை இந்தப் பிரதேசத்தில் வதியும் நான்கு மொழி பேசும் மக்களிடத்திலும் இருக்கிறது.........ஆகவே, தட்சிணப் பிரதேசம் அமைத்தால் என்ன? — என்கிற கருத்துப்பட பேசியிருக்கிறார்......"

"தட்சிண பிரதேசம், என்பதற்கு இவ்வளவு ஆதாரங்களைக் காட்ட எப்படி முன்வந்தார்கள், இவர்கள்? தென்னாட்டு மக்கள் எல்லாம் மொழியால் ஒருவர்! கன்னடமும், கவின் மலையாளமும், தெலுங்கும் தமிழின் குழந்தைகள்! எல்லோரும் கலாச்சாரத்தால் ஒருவர்! — என்றெல்லாமல்லவா, கூறுகிறார்கள்..."

"ஆமாம்!"

"அப்படிக் கூறும்போது, நாம் சொல்லும் திராவிடநாட்டை ஏற்றுக்கொண்டால் என்ன?"

"அங்குதான் தோழனே, வித்தியாசம் இருக்கிறது—இவ்வளவு ஆதாரங்களும் தருவது, தட்சிணப் பிரதேசம் அமைக்க! பிரிக்க அல்ல!"

"அப்படியென்றால்..."

"அதுதான் முன்பே சொன்னேனே—டில்லிக்குக் கட்டுப்பட்டு, மத்ய பாரதம், ஐக்கிய மாகாணம் என்பதுபோல தட்சிணப்பிரதேசம் என்று ஒரு மாகாணம் இருக்க வேண்டும் என்கிறார்கள். நாம் டில்லியின் தொடர்பு இல்லாத — தமிழ்நாடு வேண்டும்! ஆந்திரம் ஏற்படவேண்டும்! கன்னடம் இருக்கவேண்டும்!— கேரளம் அமையவேண்டும் — இவை நான்கும் சேர்ந்து, தங்களுடைய சில நலன்களை ஒன்றாகக் கவனித்துக்கொள்ளும் ஒரு கூட்டமைப்பு வேண்டும்—அதற்குப் பெயர் திராவிடக் கூட்டாட்சி (Federation) என்று சொல்லுகிறோம். அவர்கள், எல்லைமட்டும் கொஞ்சம் பெரிதாக இருக்கட்டும் என்கிறார்கள்!"

"சாத்யமா. அது?"

"சாத்யமில்லாததற்கு வக்கீலாவதுதானே ஆச்சாரியாரின் அரசியல்—இல்லையென்றால், அவரவரும் தமது மொழி, தமது அரசு என்று துடிக்கும்போது இந்த அதிசய திட்டத்துக்கு ஆதாரம் காட்டி வாதாட முன்வருவாரா?"

★

# "நியாயம்தானா, ஐயா!"

அந்த அறிக்கை மிகவும் பலனளிக்கிறதாம்-பத்திரிகைகள்மூலமும், துண்டுப் பிரசுரங்கள்மூலமும், மக்கள் கூடுமிடத்தில் ஒட்டிய சுவரொட்டிகள்மூலமும், விடப்பட்ட அறிக்கை—காட்டுக்குள்ளிருந்தபடி கலாம் விளைவிப்பதாகக் கூறப்பட்டவர்களை, திரும்பிவரச் செய்கிறதாம்!

அடி! கொள்ளை! சுடு! தூக்கு!—என்று, துரைத்தனம் நடாத்திய பிரிட்டிஷ் பிரதிநிதிகளால் முடியவில்லை; இப்போது நடக்கிறதாம்! பயங்கரவாதிகள்! கலகக்காரர்கள்! இரக்கமற்றவர்கள்!—இப்படியெல்லாம் அவர்களைப் பற்றி வர்ணிக்கப்பட்டது. அரசையே கவிழ்த்திட அப்படிச் செய்கிறார்கள், சீனர்களையும் தமிழர்களையும் சேர்த்துக்கொண்டு, பணக்காரர்களையும் தோட்ட முதலாளிகளையும் தாக்குகிறார்கள்—வெறியர்கள்! பண்பில்லா உள்ளம் கொண்ட பாதகர்கள்! என்றெல்லாம், உலகுக்கு அவர்களைப்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. அவர்கள் திரும்பிவருகிறார்கள்! அரசு வெளியிட்ட பிரகடனத்தையொட்டி, அஞ்ஞாதவாச வாழ்க்கையை விட்டுவிட்டு நகருக்குள் பிரவேசிக்கிறார்கள்! துப்பாக்கியையும் குண்டுகளையும் தூக்கிக்கொண்டோ, கோடரியும் குத்தீட்டிகளையும் ஏந்தியவண்ணமோ அல்ல—புன்சிரிப்புடன், கைகூப்புதலுடன்.

சர்க்காரின் அறிக்கை, வெற்றி பெற்று வருவதாக சிங்கப்பூர் ஏடுகள் தெரிவிக்கின்றன — மலேயாவில் சமீபத்தில் துங்கு அப்துர் ரஹிமான் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட மந்திரி சபை, துண்டறிக்கைகளாகவும், பத்திரிகை விளம்பரங்களாகவும், வெளியிட்ட பிரகடனம், வெற்றிபெறுகிறது; விரும்பிய பலனைக் கொடுக்கிறது. இது மலேயாவில்!

இதோ — இங்கும்தான் செய்தி வந்துகொண்டே இருக்கிறது, அடிக்கடி. துருப்புகள் தாக்கின, பத்துப் பேருக்குக் காயம், பயங்கரவாதிகள் விரட்டப்பட்டார்கள், பலம் இன்னும் தேவைப்படுகிறது-என்பதாக. செய்திகளைப் படிக்கும்போது, அவர்கள் என்ன காட்டுமிராண்டிகளோ, மனிதர்களையே உயிரோடு விழுங்கும் உருவங்களோ என்று எண்ணத் தோன்றும். அவ்வளவு பயங்கரத்துடன் வர்ணிக்கப்படுகிறது. ஆனால், உண்மையில் அத்தகையவர்களா என்றால், இல்லை. அவர்கள் வேறு ஒன்றும் கேட்கவில்லை—காளிக்குப் பலியிட கைக்குழந்தைகளைத் தூக்கிச் செல்வோம் என்று பயமுறுத்தவில்லை—கூளிக்குக் காவு கொடுக்க குழந்தையுண்டானவளைக் கொண்டு செல்வோம் எனக் கூறவில்லை — சுதந்திர கேட்கிறார்கள்; அடிமைப்பட்ட தங்கள் பிரதேசத்துக்கு விடுதலை கேட்கிறார்கள். நீ யார் எங்களை அடக்கியாள-எங்கள் நாட்டை எங்களிடம் கொடு என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்பதால் அவர்களை அரக்கர்களென்று புராணங்களில் கூறப்படுகிறதே, அந்தளவுக்கு மக்கள் கருதும்படியாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

அதனால், அப்படிப்பட்டவர்களில் இருவரைச் சுட்டுத்தள்ளினோம்; இவ்வரைப் பிடித்தோம் — ஒருவன் ஓடி விட்டான்! மாயமாக வருகிறார்கள் மறைகிறார்கள்—மலைவாசிகளல்லவா அதனால் குகைகளிலும் ஆபத்தான இடங்களிலும்கூட மறைந்துகொள்கிறார்கள்—என்றெல்லாம், கூறப்படுகிறது ஆனால், அவர்களது தலைவரான

பிஜோ, தான் ஒரு பலாத்காரவாதியல்ல என்று எடுத்துச் சொல்லியிருக்கிறர்—இந்திய ஏடுகளால், கோர முடையோர்போல வர்ணிக்கப்படும் நாகர்களின் விடுதலை இயக்கத்தவர்களான அவர்கள், கடந்த முறை தேர்தல் நடைபெற்றபோது, கலந்து கொள்ளாமல் பகிஷ்கரித்தனர்—அரசியல் விடுதலை எமக்கு வேண்டும், ஆகவே கலந்து கொள்ளமாட்டோம் என்று அறிவித்தனர். அஸ்ஸாமின் ஓரத்தில் வாழும் நாகர்களை, அரசியல் யூகம் அற்றவர்களென்றே, ஏடுகள் வர்ணிப்பதுபோல மலைஜாதிக் காட்டுமிராண்டிகளென்றே, எவரும் கருதிவிட முடியாது. இருந்தும், இந்திய சர்க்கார், அவர்களைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கிறது.

"வடகிழக்கு எல்லைப்புற ஏஜன்சியைச் சேர்ந்த டியூன்சாங்டிவிஷனில் இந்தியத் துருப்புகள் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கையினுல் சர்க்காருக்கு எதிரான காரியங்களைச் செய்து வரும் நாகா கலவரக்காரர்களில் 40 பேர் கொல்லப்பட்டனர். அநேகர் காயமடைந்தனர்."

டில்லி தருகிறது, இச்செய்தியை பஞ்சசீலம் பரவுக—என்று அகில உலகுக்கும் அறிக்கைகள் அனுப்புகிறரே, அந்த நேரு பண்டிதரின் டில்லி அறிவிக்கிறது — 40 பேர் கொல்லப்பட்டனராம்; அநேகருக்குக் காயமாம்!!

சமாதானம், அமைதி, ராணுவ தளவாடங்களைக் கட்டுப்படுத்துக, வெள்ளைப் புருக்களை பறக்கவிடுங்கள்!—என்று விண்ணதிர முழக்கமிடுகிறர், நேரு பண்டிதர். விருந்துபசாரம்—வீசப்படும் வெண்சாமரம்—மாலை மலை—வெள்ளிப் பேழை-வெற்றி விஜயா! வீரா! தீரா! எனும் பாராட்டுகள்—ஆனல், அந்தப் பண்டிதருடைய ஆட்சிக்கு உட்பட்ட இடத்திலே, சுடுகின்றனர் வீரர்கள்! இராணுவம்—எதிரிநாட்டு ராணுவமல்ல!—சொந்த நாட்டு இராணுவம், சுட்டுக்கொல்கிறது, மக்களை! 40 பேர் மாண்டனராம்—அக் 5ந் தேதிய தகவல் இது—அப்படியானல் இதுவரை எத்தனை பேர் கொல்லப்பட்டனரோ! காயமடைந்தோர் தொகை எத்தனையோ!!

தூங்குரஹ்மான்—சில மாதங்களுக்குமுன் அரசியல் பீடம் ஏறியவர்—அகில உலகிலும் அவருக்கு 'விளம்பர முரசு'கள் கிடையாது—அவருடைய ஆட்சியில், அன்பால், மாற்றர் வசமாகின்றனர்! கானகவாசம் துறந்து நாடுநோக்கி வருகின்றனர்! ராஜ தந்திரத்தில் பேர்போன பிரிட்டிஷாரே, வியக்கும்படி; அன்புப் பிரகடனம் அவர்களை வலியவரச் செய்கிறது. கலகக்காரர்கள் — செம்பிடாரிகள்—அராஜகவாதிகள் — என்றெல்லாம், தூற்றப்பட்டவர்கள் அவர்கள். ஆயினும், "சமரசமாகப் பேசலாம். உங்கள் கொள்கைகளைவந்து நேரில் கூறுங்கள்" எனும் அரசாங்க அறிக்கை கண்டதும் வருகிறர்கள்.

ஆனல், இங்கோ, அப்படி எவ்வித உறுதிமொழியும் அளிக்கப்படவில்லை—அலட்சியம் வீசப்படுகிறது! கலந்து பேசுவோம், என்று அழைக்கப்படுவதில்லை—அதற்குப் பதிலாக விஜயம் செய்வதும், தேசியத்தின் அருமை குறித்துப் பேசுவதும், கண்டனமாரிகளைக் கொட்டுவதும், திரும்பிவருவதுமாக இருக்கிறர் நேருபண்டிதர்! சில திங்களுக்கு முன்பு நாகநாடு சென்றபோது, நாகர்களுடன் சேர்ந்து அவர் படம் எடுத்துக்கொண்டதாகவும், அவர்களுக்கு எல்லாவித நலனையும் செய்வதாகக் கூறியதாகவும்—ஏடுகள் வெளியிட்டன! ஆனல், அவர்களது அடிப்படைக் கோரிக்கையைப்பற்றியோ, அறிந்தும் அறியாதவர்கள்போல இருக்கின்றனர்—அந்தக் காரணத்தாலேயே, கலகக்காரர்கள்! காட்டுமிராண்டிகள்! சுட்டுப் பொசுக்குங்கள்! என்று கட்டளை பிறப்பிக்கிறர்கள். அன்பால், எதையும் வெல்லலாம் என்று அறிவிக்கிறது, துங்குவின் செயல்! ஆதிக்கம் விரும்பிகள் இப்படித்தான் செய்வர் எனத் தெரிவிக்கிறது, டில்லியின் நடவடிக்கை! மலேயாவாதிகளைவிட, மன ஆவேசம் அதிகம் கொண்டவர்களல்ல நாகர்கள் — எனினும், நாக நாடன்றே கேட்கிறர்கள்! கேட்கலாமா—இந்திய ஐக்கியம் என்னுவது' அதனல், இப்படி மனிதவேட்டை நடக்கிறது—அசோக சக்கரம்—அகிம்சா மார்க்கம்—காந்தியடிகளின் பெயர்—உலகச் சமாதான ஒலி—எல்லாம் இருந்தும், வேட்டையாடப்படுகிறர்கள் — வெறியர்கள் அல்ல; விடுதலை விரும்பிகள்!!

★


காஞ்சியில்

மாநில மாநாட்டு நிதிக்காக

★ சிறப்புச் சொற்பொழிவு ★

6-11-55 ஞாயிறு காலை 9 மணிக்கு

ஆர். பாபு தலைமையில்

சி. பி. சிற்றரசு

பேசுவார்.

—நகர தி. மு. க.


4-ம் பக்க தொடர்ச்சி

காய்ச்சுவதும், விஸ்கி பிராந்தி போன்ற உயர்ந்த சரக்குகளைக் கொண்டு வந்துவிற்பனை செய்வதும், ஏழ்மையாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தினுலுமே விளைகின்றன. இதைத் தடுக்கும்படியான தக்க நடவடிக்கையெடுத்துவிட்டால், காரியம் சாத்தியமாகும்!

இது தவிர, குடிகாரர்கள் பலரகமிருக்கிறர்கள். தரத்துக்குத் தக்கபடி சாப்பிடுவோரும் உள்ளார்கள். இவர்களையெல்லாம், ஒரேயடியாக நிறுத்தும்படிச் செய்வதென்பது கொஞ்சம் சிரமம்தான்-பஞ்சமா பாதகம் என்று சொல்லியோ, பகவான் கண்ணைக் குருடாக்கிவிடுவார் என்று பயமுறுத்தியோ, அவர்களை நிறுத்தச் சொல்ல முடியாது. கோயில்களில், ஆண்டவனுக்குப் பின்னலிருந்தே, சாராயமும் பிராந்தியும் கைப்பற்றப்படுவதாகச் செய்திகள் வரும்போது-இந்தப் பயமுறுத்தலுக்கா அஞ்சப்போகிறர்கள்; ஒருநாளுமில்லை. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் 'பர்மிட்' முறைகளைப் படிப்படியாகக் குறைத்துவருமாறும் செய்யவேண்டும்-இப்போது 'பர்மிட்' என்பது உயர்தர குடிகாரர்களுக்குமட்டும் கிடைத்த ஒரு பாக்கியமாக இருக்கிறதே ஒழிய, கள்ளும் கஞ்சாவும் குடித்த ஏழைக்கு எந்தவித நிவாரணமும் இல்லை. அதனுலும், பலர், ஏதாவது 'குடிப் பொருள்களை' காய்ச்சவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதற்கும் ஏதாவது 'பெர்மிட்' முறையோ-அல்லது ஏதாவது ஒரு வழியோ கண்டாகவேண்டும்.

இப்படிப்பட்ட வழிமுறைகளைச் செய்து, காரிய சாத்யமான வகைகளைக் கண்டுபிடிக்கச் செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டி, அது சம்பந்தமாக உருவான யோசனைகளை-தெளிவாகவும், குறிப்பிட்டும்-கூறவில்லை. இது பெரியஏமாற்றமேயாகும் என்கின்றன தேசீய ஏடுகள்.

நாம், இதனை ஏமாற்றமாகக் கருதவில்லை; ஏனெனில், இப்படி கமிட்டிகள் போடுவதே, தனக்கு வேண்டிய சிலருக்கு ஏதாவது வேலை தரவும்-காரியத்தைத் தட்டிக் கழிக்கச் செய்யப்படும் ஒருமுறையாகவுமே இருந்து வருகிறது. பூரண மது விலக்குபற்றிய ஆலோசனைகள், காங்கிரஸ்காரர்களுக்குமட்டும்தான் தெரியும் என்பதில்லை, மாற்றுக் கட்சியினருக்கும் தெரியும். ஆனல், மாற்றுக்கட்சியினரின் கருத்துக்களை மதிக்கவேண்டுமென்பது காரியவாதிகளுக்குத்தானே தெரியும்!!

★

# ஐ. நா. சபையும்–நாமும்

பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன—என்று சொல்லி, பல நாடுகளில் உள்ளோரும், பாராட்டியும் பலன்களை விவரித்தும் பேசியிருக்கிறார்கள், ஐக்கிய நாடுகள் சபையைக் குறித்து. உலக ஒற்றுமை என்னும் உன்னதமான நோக்கத்துக்காக அமைக்கப்பட்ட ஐ. நா. சபையால், பல பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முடியவில்லை — என்றாலும், உலகத்தோர் ஒன்றுகூடி, தத்தமது மனதிலுள்ள கருத்தை, மாற்றாரும் உணரக்கூடிய சந்தர்ப்பத்தை உண்டாக்கித்தரும் வகையிலாவது இருந்து வருகிறது.

அந்தச் சபையில், பெரிய நாடுகள் என்பவைமட்டுமல்ல, சின்னஞ்சிறு நாடுகள்கூட இடம் பெற்றுஉள்ளன. சின்னஞ்சிறு நாடுகள்மட்டுமல்ல, ஆண்டுதோறும் கட்டவேண்டிய கட்டணத்தை ஐ. நா. சபைக்குச் செலுத்தாமல்கூட சில நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஆச்சரியமாயிருக்கும், கட்டணம் செலுத்தக்கூடவா அரசுகளால் இயலவில்லை என்று? ஆமாம்! ''பொலிவியாவும், உருகுவேயும் அவைகள் செலுத்தவேண்டிய தொகையில் இன்னும் பாக்கிவைத்துள்ளன'' என்று ஐ. நா. சபையின் அறிக்கையொன்று ஆறேழு மாதங்களுக்குமுன் வெளியிட்டது.

இப்படிப்பட்ட சிறு நாடுகள் எல்லாம்கூட இடம் பெற்றிருக்கும்போது, சுதந்திரம் பெற்றுவிட்ட திராவிடநாடு வெகு எளிதில் இடம்பெற முடியும்-திராவிடத்தில் வாழ்வோரின் பண்பையும் வாழ்வு முறையையும் விளக்கி, அறநெறியையும் - அன்பு வழியையும் எடுத்துச் சொல்லமுடியும், உலகுக்கு.

திருச்சியில், கலெக்டர் மலையப்பன் தலைமையில் நடைபெற்ற ஐ. நா. தின விழாவில், அரியதொரு யோசனை கூறப்பட்டதாம்—திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூற்களை, ஒவ்வொரு ஐ. நா. சபை உறுப்பினருக்கும் தர, இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும் என்று. நல்ல ஆசை ஆனால், நிச்சயம் நடைபெற முடியாதே, இந்த ஆட்சியில்!

டாக்டர் ஏரென்பெஸ் எனும் பேராசிரியர் தெரிவிக்கிறார், வடக்கைவிட தென்னாடுதான் அறிவிலும் ஆற்றலிலும் எப்போதும் சிறந்ததாக விளங்கி வந்திருக்கிறது-இப்போதும் விளங்கி வருகிறது, என்பதாக. அவர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் மனித இன வரலாற்றுப் பேராசிரியர்!

இதனை, ஏசிப் பேசும் நேரு பண்டிதர்கூட, சென்னை 'விஜயத்தின்' போது, குறிப்பிட்டார், ''தென்னாட்டிலிருக்கும் உங்களிடமிருந்து வடநாட்டுக்காரர்களாகிய நாங்கள் எவ்வளவோ கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. இவ்வளவு அமைதியும் சாந்தமும் அங்கே காணமுடியவில்லை'' என்பதாக.

அமைதி, சாந்தம் மட்டுமல்ல, அறிவிலும் ஆற்றலிலும்கூட நம்மவர்கள் வல்லவர்கள். காரணம். அவர்களுக்கென தொன்றுதொட்டு இருந்துவரும் பழக்க வழக்கங்களும் - பண்பாடும்-இலக்கியமும், நூலறிவுமேயாகும்.

அம்புறாத்தூணியிலிருந்து புறப்பட்ட அம்பு, எதிரியைத் தேடிச் சென்று, அவன் ஒளிந்திருந்த இடத்துக்குள் புகுந்து மார்பைத் துளைத்துவிட்டு அந்தப் பாபம் நீங்க சப்த சமுத்திரங்களிலும் நீராடிவிட்டு, கடைசியில், இராமபிரானின் அம்புறாத்தூணியை வந்தடைந்தது-எனும் கதை, நம்முடையதல்ல, வடநாட்டுச் சரக்கு.

தன்மீது மாற்றார் வீசிய வேலைப் பிடுங்கி எடுத்து, துதிக்கை நீட்டி வந்த காட்டானையைக் கொன்று அதன்மீது வந்த அரசனையும் கொன்றுவிட்டு, தானும் மடிந்தான் என்பது, தென்னாட்டுப் புறம் கூறும் வீரம்.

அந்த வீரப்பண்பு, இன்னும் மறையவில்லை, தெற்கில்; மாசு படிந்துள்ளது வாழ்வில் என்றாலும், பழைய பண்பும் எண்ணங்களும் தென்னாட்டினரின் மனதைவிட்டு நீங்கவில்லை— நீங்கவும் நீங்காது; ஏனெனில், அவர்கள் போற்றும்-அகம், புறம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை எனும் நூல்கள் யாவும் அவர்களுக்கு அத்தகைய கெடுமதிகளை உண்டுபண்ணாது.

எத்திப் பிழைப்பதையும், ஏவலராகி வாழ்வதையும், புத்தியிழந்து வலிவற்றவர்களை நசுக்குவதையும், ஒரு நாளும் விரும்பாதவர், தமிழர். அத்தகையவர்களின் தமிழ் மறையை, உலகும் உணர்ந்தால், எவ்வளவோ நல்லது!

உலகில், அறிவியலும், அரசியல் கோட்பாடுகளும் ஏராளமாக மலிந்திருக்கலாம்-ஆனால் மனிதப் பண்பையும், அறநெறியையும் வளர்க்கும் நீதி நூல்களும் நெறியாளர்களும், அதிகமில்லை. அத்தகையவர்களையும், அதற்கான கருத்துகளைப் பரப்பும் ஏடுகளையும் தென்னகம் வைத்திருக்கிறது. திறக்கப்படாத கதவுகளைப்போல!—அழைக்கப்படாத விருந்தினர்களைப் போல!

திராவிடமும் தனிநாடாகி, ஒரு உறுப்பினராகப்போய் உலகச் சபையில் அமரும் நாள் வருமாயின்—வாழ்ந்து வீழ்ந்த தமிழகம் தன்னையும் தன்னுடைய பழம் பண்பினையும் உலகுக்கு விளக்கி, தன்னாலியன்றதைச் செய்யக்கூடும். திருக்குறளை எடுத்துச் செப்பி, தீச்செயலோரின் சிந்தையெல்லாம் திரும்பும்படிச் செய்ய முடியும்!

இப்போது மட்டும் ஐ. நா. சபைக்குப் போகவில்லையா,-தென்னாட்டார்-வி. கே. கே. மேனன் யார்? பல பிரிவுகளில் இடம் பெறும் ஆற்காடு ராமசாமி, இலட்சுமணசாமி ஆகியோர் யார்?—எனக் கேட்கக் கூடும். அவர்கள் போகிறார்கள், திருக்குறள் தேசத்தின் பிரதிநிதிகளாக அல்ல. வடநாட்டு ஆதிக்கத்தின் தூதுவர்களாக!

அவர்கள் டில்லியின் குரலை முழக்கிவிட்டுத் திரும்பவேண்டிய நிலைதான் இப்போது இருப்பது.

நாம் விரும்புவது, விடுதலை பெற்ற திராவிடத்தின் தூதர்கள், அமரும் நாள் வரவேண்டும்—அப்போது, திருக்குறள் முழங்கும்! தென்னகத்தின் பண்பினை எடுத்துச் சொல்லி, உலகத்துக்கு நெறியினையும், மாற்றாரையும் உற்றாராக்கிக் கொள்ளும் உயரிய உபதேசங்களையும் வழங்கலாம்!

☆

# "எல்லோரும்" மகிழவேண்டுமாமே!

அழுது அலறும் ஏழையை அழைத்துப்போய், "பாரடா! பண்புகெட்டவனே! ஜோதிவெள்ளமாக ஜொலிக்கும் மாளிகையிதனைப் பார் — மண் குடிசையில் கிடக்கிறேன் என்று ஓலமிடுகிறாயே, பார் இதை! எவ்வளவு பெரிய மாளிகை, அழகான படங்கள் வைக்கப்பட்டிருக்கிறதே அதோ, அதற்காகச் செலவு ஆறுலட்சம், இப்படிப்பட்ட மாளிகை எங்கேயிருக்கிறது? ரஷ்யாவிலா! இங்கிலாந்திலா! அமெரிக்காவிலா! உன்னுடைய தாய்நாட்டில்தானே? இதைப்பார்த்து, மகிழ்ச்சிகொள்! மனம் பூரிப்படை!" என்று சொன்னால், ஏழை கேட்பானல்லவா, "அது சரிசாமி! ஆனால் அந்த மாளிகையில் இருப்பது யார்? என்னைப்போன்ற ஏழைகள் போய் குடியிருக்க அனுமதிப்பீர்களா! அந்த நாளையல்லவோ, நான் பொன்னாளாக வரவேற்கக் காத்திருக்கிறேன்" என்று. அப்படி அவன் கேள்வி கேட்கும்போது, சீறும் புலிகளாகிறார்கள், வடநாட்டு அதிபர்கள்! அணையைப்பார் — அது கட்டப்பட்டிருக்கும் அழகைப்பார் —அங்கிருந்து தண்ணீர் சுழன்றோடுவதைப்பார் — சுழன்றோடும் நீரைக்கொண்டு மின்சாரம் உற்பத்திசெய்யும் விதத்தைப் பார்— அந்த மின்சாரம் எங்கெங்கு கொண்டு செல்லப்படுவது என்று போட்டிருக்கும் திட்டத்தைப் பார் —என்று, தெரிவிக்கும்போது, ஏழையின் நிலையிலே உள்ள தெற்கு, "எல்லாம்சரி, சார்! ஆனால் இத்தனையும் வடக்குக்குத்தானே, எனக்கில்லையே?" என்று கேட்கத்தானே செய்யும்? அப்படிக் கேள்வி பிறந்தால், "அற்பனே! எங்கிருந்தால் என்ன? வடக்காவது! தெற்காவது! எல்லாம், இந்தியாவில் தானே செய்யப்படுகிறது? அதைக் கண்டு மகிழ்ச்சிபெறு! வீரநடை போடு! சங்கநாதம் செய்! என்று சரமாரியாகச்சொரிகிறார்கள், புத்திமதிகளை. இன்றல்ல, சுதந்திரம் கிடைத்த நாள்முதல், வடக்குக்கும் தெற்குக்கும் இந்த வாதம் நடந்தபடியே உள்ளது — ஒவ்வொருதடவையும், வடநாட்டு அதிபர்கள் அகண்ட தேசியம், அகில இந்தியா, எங்கிருந்தால் என்ன, படிப்படியாகச் செய்யலாம், என்று பல்லவி அனுபல்லவி சரணம்பாடிக் காட்டுவதிலேயே இருக்கிறார்கள்.

நேரு பண்டிதர், கடந்த சில திங்களாகச் செல்லுமிடந்தோறும், தன்னுடைய சர்க்கார் சாதித்திருக்கும் காரியங்களைக் கண்டு எல்லோரும் மகிழ்ச்சியடைய வேண்டுமென்று, தெரிவித்து வருகிறார். தன்னுடைய சர்க்கார் கட்டிய அணைகளே, ஆண்டவனின் இருப்பிடங்கள்! தொழிற்சாலைகளே, கோயில்கள்! புதிய திட்டங்களே, மகேசன் பூஜை! அபிஷேம்என்பது அவைகளைப் போற்றுவது! ஆராதனை செய்வது, அந்தத் திட்டங்களின் புகழை எடுத்து எல்லோரிடமும் பரப்புவது! — என்பதாக, தேனும் பாலும் கலந்து பேசிவருகிறார். உண்மை! இப்படி, மக்கள் சர்க்கார் நிறைவேற்றுகிற திட்டங்களின் மீது, மக்களுக்குப் பற்றுதலும் ஆர்வமும் உண்டாக வேண்டியதுதான்!

ஆனால், இமயத்தில் செய்யப்பட்ட காரியம் குறித்து, குமரிமுனையிலிருப்போன்கூடக்குதூகலம் அடைய வேண்டுமாம், நேருவுக்கு! சிந்திரி தொழிற்சாலையின் அருமை குறித்து ஒவ்வொருவனும் சிந்துபாடிக் களிக்கவேண்டுமாம்! —ஏழையை அழைத்துப்போய் மாளிகையைக் காட்டும் மாயமதியினன் கவனமே வருகிறது நமக்கு.

நோயாளிக்கு எது தேவை? விருந்தா! மருந்தா! — குறைமதியோனும், கூறுவான் பதில். தென்னகம், நோயாளியின் நிலையிலே இருக்கிறது—தி. மு. க. சொல்வது அல்ல; நாட்டின் நலனிலே அக்கரையுள்ள அத்தனை பேரும் கேரளமுதல் ஆந்திரம் வரை, கன்னடமுதல் தமிழகத்து காங்கிரஸ்காரர்கள் வரை—கதறாத நாளில்லை. தெற்கு, புறக்கணிக்கப்படுகிறது! தென்னாட்டை, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது! — என்று குறைகூறாத அரசியல் வாதிகளே கிடையாது. இருந்தும், நம்மையெல்லாம் பெருமைபடச் சொல்கிறார், நேரு! பெரியபெரிய திட்டங்கள் இந்திய மண்ணில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறதாம்! அதைப் பார்த்து, எல்லோரும், பூரிப்படைய வேண்டுமாம்,

அதைக்கண்டு அந்தந்த வட்டாரத்திலிருப்போர் அகமகிழ்ச்சி அடைய வேண்டும் என்று சொல்வது, நியாயம்—அவசியமும், கூட.

அன்பர் நேருவுக்கு எல்லோரும் ஆனந்தக் கூத்தாடவேண்டுமாம்.

அப்படிச் சொல்லுவதைக் காணும்போதுதான், நமக்கு ஐயம் ஏற்படுகிறது. எல்லோரையும் ஏன் மகிழ வேண்டுமென்று அழைக்கிறார்? அவருக்கே, புரிகிறது, எல்லோருக்கும் நாம் நீதி வழங்கவில்லை — அதனால் ஒரு பக்கம் அணை கட்டினால், இன்னொரு பக்கம் அதிருப்தி உண்டாகிறது— தெற்குத் தேய, வடக்கு வாழ்கிறது என்று கண்டிக்கிறார்கள் எனும் உண்மைகள். அதனால்;

எல்லோரும் ஆனந்தப்படுங்கள்! எனக்கில்லையே — உனக்கில்லையே என்று, கருதாதீர்கள், என்று தெரிவிக்கிறார்!

அவர் அப்படிக் கூறுவதைக் கேட்டதும், அவர் கூறுவதே வேதவாக்கியம் எனக் கருதிக் கொண்டிருக்கும் ஏடுகளும், படங்களாகப்போட்டு, 'வடஇந்திய யாத்திரை' என்று மகுடமிட்டுப் பத்தி பத்தியாக எழுதித் தள்ளுகின்றன- 'கல்கி' ஏட்டில், சுமார் 12 கட்டுரைகள் வந்துவிட்டன இதைப்பற்றி— அவைகளைப் படிக்கும்போது, விஞ்ஞானத்தின் அற்புதம் தெரிகிறது, நிச்சயமாக! ஆனல், அந்த அற்புதங்கள் யாவும், எங்கே? இங்கா! அல்ல, அல்ல, வடக்கே இமயமலைச் சாரலில், கங்கை நதிக்கரையில், பஞ்சாலத்தில், பம்பாயில்! அதைப் பார்க்கும்போது, வற்றி உலர்ந்து போய்க் கிடக்கும், தென்னாட்டவருக்குத் தேன் தடவியது போலவாயிருக்கும் நாக்கில்? திகைக்கிறான்! விழிக்கிறான். வேதனையடைகிறான் — எரிமலையாகிறது, மனம்—அக்கிரமம், வடக்கு வாழ, தெற்கு தேய்வதா? என்று முழக்கமிடுகிறான்.

அந்த முழக்கத்தைக் கண்டு, தன்மீது ஆத்திரம் வந்துவிடுமோ மக்களுக்கு, டில்லி சூதர்கள் கூடம் எனும் உண்மையை மக்களும் உணர்ந்துகொள்வார்களோ எனும் அச்சத்தில், நேரு பண்டிதர் அவர்கள், எல்லோரும் ஆனந்தமடைய வேண்டுமெனப் பன்னிப்பன்னிக் கூறுகிறார்.

வடக்கே நிறைவேற்றப்படும் ஆலைத் திட்டங்கள், அணைக்கட்டுத் திட்டங்கள் முதலியவைகளைப் பார்த்து தெற்கேயிருப்பவன், 'தில்லானா'ஆடி'சிந்து'பாடிக் களிக்க வேண்டுமெனக் கருதுகிறார்!

"இது என்னய்யா, அக்கிரமம்? நீதியா! நேர்மையா!" என்றால் "குறுகிய மனோபாவம் ஒழிய வேண்டும்— எனையும், எங்கள் கிராமம், எங்கள் ஜில்லா, எங்கள் மாகாணம், எங்கள் தேசம் என்று பார்க்காதீர்கள். உலகத்தையே, ஒரு சேர நோக்குங்கள். இளைஞர்காள், உங்கள், நோக்கம் விசாலமடையட்டும்" என்று வீர கர்ஜனை செய்கிறார்; டில்லியில், அக் 23-ந்தேதி நடைபெற்ற 'இளைஞர் தம் விழா' வொன்றில், இவ்வண்ணமே தெரிவித்துள்ளார்.

சிந்தியுங்கள்; செயல்புரியுங்கள்.

காரியமற்ற ஆராய்ச்சி, கவைக்குதவாது.

இளைஞர்காள்! உலகம் உங்களை எதிர்பார்க்கிறது.

என் நாடு என்றுசொல்லி, தற்பெருமை கொள்ளாதீர்கள்—உலகத்தையே உங்கள் கண்ணால் பார்க்கவேண்டும்.

அரசியல்வாதிகளுக்கு எதிர்காலத்தில் இடம் கிடையாது; ஆக்க வேலைக்காரர்களே போற்றப்படுவார்கள்.

வாலிபர்காள்! — ஆக்க வேலைக்காரர்களாக மாறுங்கள்.

உலக மேடையில் ஒளிவீசித் திகழ, ஒவ்வொருவரும் முயற்சியுங்கள்.

என்பதாக, அழகு மிளிர, கோர்வை குலையாமல், பேசியிருக்கிறார்! இளைஞர்கள்பால், அவர் கொண்டுள்ள அன்பு பரிணமிப்பது போலுள்ளது, பேச்சு, அதைப் படிக்கும்போது, நேருபண்டிதருக்கு எத்தனை 'சபாஷ்'களை வேண்டுமானாலும், தரலாம் — அவர் பேச்சுத் திறமைக்காக. ஆனல், நிலைமை! வடக்கே உள்ள இளைஞர்களுக்காவது, என்சினீயர்களாக— விஞ்ஞானக் கூடங்களில் பணியாற்றுபவர்களாக—ஆலைப் பயிற்சிகளைப் பெற்று ஊதியம் தேடக்கூடியோர்களாக, ஆக, வாய்ப்பும் வசதியும் உண்டு.

சிந்திக்க ஆராய்ச்சிக்கூடம் உள்ளது; செயலாற்றவும் வாய்ப்பு இருக்கிறது.

தெற்கே என்ன இருக்கிறது? ஏது இடம்? விவசாயத் துறையில் தனிப்பயிற்சி பெற்றோர்கூட, சர்க்கார் இலாகா 'குமாஸ்தா'உத்யோகத்துக்குமனுப்போடலாம் என்றுதானே ஆக்கிக் கொண்டிருக்கிறோம்; எத்தனை பேர் "வழி என்ன — என்ன செய்வோம்" என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமா — கோவணாண்டிகளாய், நேரு கூறுகிறாரே உலக அறிவு பெறுங்கள் என்று, அந்த உலகம் என்றால் எருமை மாட்டின் முதுகு என்று எண்ணியவர்களாயிருக்கும் சிறுவர்கள் தொகை எத்தனை கோடி வேண்டும்? தாலூகா என்றால் அறியாத வாலிபர்கள் எவ்வளவோ பேர் உண்டே. கலப்பையும் காளைமாட்டையும் தவிர்த்து வேறு எதனையும் அறியாத இளைஞர்கள், ஒவ்வொரு கிராமத்திலும் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்களே — அவர்களுக்கு, நேரு பண்டிதர் தரும் நம்பிக்கை என்ன?

இதுபோல, வடக்கேயும் வறுமையாளர்கள் இல்லையா என்றால், உள்ளனர்; என்றாலும் வடக்கு ஆலை மயமாவதால், அவர்களுக்கெல்லாம் இன்றில்லாவிட்டாலும் நாளை — நாளை இல்லாவிட்டாலும், இன்னும் சில ஆண்டுகளில், விடிமோட்சம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது.

ஆனல், அந்த நம்பிக்கைகூட கூட இல்லையே இங்கிருக்கும் ஏழை வாலிபனுக்கு.

போலோ காலர் சட்டையும், புஷ் கோட்டும், டுவீட் சூட்டும், சுந்தரமான டையும் கட்டியவண்ணம்— டில்லிவரை வந்த வாலிபர்களின் மத்தியிலே—இப்படியெல்லாம் வாரி வீசமுடிகிறது கருத்துக்களை—விழி கண்ணை, பார் உலகை, என்று அழைக்கமுடிகிறது.

ஆனல், எந்தவித நம்பிக்கையுமின்றி, இங்கே இருக்கிறானே படித்தவனும் — படிக்கிறவனும் — படிக்க வாய்ப்பில்லாமலே உழல்பவனும்; அந்த வாலிபனுக்கு, வருங்கால உலகத்துக்கு, எதைத் தருகிறார் பண்டித நேரு? எல்லோரும் மகிழ்ச்சியடையுங்கள்; எல்லோரும் ஆனந்தக் கூத்தாடுங்கள்; என் புகழைக் கண்டு புளகாங்கிதமடையுங்கள்— எனும், உபதேசங்களையா!

★

## இலங்கை அன்பர்களுக்கு

இலங்கைத் தீவுக்கு 'நம் நாடு' இதழ் விற்பனையாளராக கீழ்க் காணும் தோழர் நியமிக்கப்பட்டு, பிரதிகள் நாள் தோறும் விமானத்தின் மூலம் அனுப்பப்படுகின்றன. ஈழத்து அன்பர்கள் அனைவரும் அவரிடம் தொடர்புகொள்ள, வேண்டுகிறோம்.

தோழர் வி. எஸ். முருகன்,
82/13 குமாரத்தெருகொழும்பு 11
பொறுப்பாளர்: 'நம் நாடு'

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.